உதயன்

பக்கங்கள் - 20 | விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :282 ஆவணி 22 ஆம் நாள் திங்கட்கிழமை 07 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

*சீரற்ற காலநிலை*

## மரம் விழுந்து பெண் சாவு

கொழும்பு, செப். 7
நாட்டின் பல பகுதிகளில் தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக காலி உனவட்டுன 19

## தமிழ்த் தேசியக் கட்சிகளின் இளைஞர் அணிகள் ஓரணியில்

'எங்களைப் பார்த்து மூத்த தலைவர்கள் திருந்துங்கள்' 19




# எங்களுக்கு எந்த நாடும் பாடம் எடுக்க வேண்டிய தேவையில்லை

### பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆவேசக் கருத்து



கொழும்பு, செப்ரெம்பர் 7
புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் எங்களுக்கு எந்த நாடும் பாடம் எடுக்கத் தேவையில்லை. உள்ளிருந்தோ அல்லது வெளியிலிருந்தோ எவரும் அழுத்தங்களையும் பிரயோகிக்க முடியாது என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆவேசமாகக் கருத்து வெளியிட்டுள்ளார். 19

## மணி அணி தனிவழி

யாழ்ப்பாணம், செப். 7
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்தேசிய அமைப்பாளராகவும் ஊடகப் பேச்சாளராகவும் இருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் அமைப் பொன்று 19

## சங்கிலி அறுப்பு

கொடிகாமம், செப். 7
ஆலயத்துக்குச் சென்று வீடு திரும்பிய பெண்ணிடம் மோட்டார்சைக்கிளில் சென்ற நபர் தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று மதியம் 1.30 மணியளவில் கொடி 19

*யாழ். செயலகத்தில்*

## மத்திய வங்கி ஆளுநர் தலைமையில் கூட்டம்

யாழ்ப்பாணம், செப். 7
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் லக்ஷ்மன் தலைமையில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இன்று காலை கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.
நுண்நிதிக் கடன் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரிய 19

## சடலமாக இளைஞன் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 7
மாதகல் நாவலடி பிரதேசத்தில் இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.
பாலசுப்பிரமணியம் 19

## பாடசாலைச் செயற்பாடுகள் நாளை முதல் வழமைக்கு

கொழும்பு, செப். 7
கொரோனா தொற்றுக் காரணமாக மூடப்பட்ட பாடசாலைகளில் அனைத்து கல்வி நடவடிக்கைகளும் நாளை முதல் வழமை போல் மீண்டும் தொடங்கும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.
பல கட்டங்களாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புகளின் கல்வி நடவடிக்கைகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் தொடங்கும் என்று கல்வி அமைச்சின் செயலர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார். 19

## ரெலோ எம்.பிக்களுக்கு யாழில் நேற்று வரவேற்பு



யாழ்ப்பாணம், செப். 7
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) சார்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை இடம்பெற்றது.
யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில், தமிழ் ஈழ விடுதலை இயக் 19

*முச்சந்தி முரளி*



"இந்தச் சிறுபிள்ளைகளின் வேளாண்மை வீடு வந்து சேர்ந்தா சந்தோசம் கண்டியளோ"

## வாள்கள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 7
இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வடலியடைப்பில் வீடொன்றைச் சோதனையிட்ட 19



*ஓய்வுபெற்ற*

## ஆசிரிய ஆலோசகர் விபத்தில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப். 7
இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிய விபத்தில், வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையைச் சேர்ந்த 19



## பெண்ணைக் காவு கொண்டது டிப்பர்



கொடிகாமம், செப். 7
சாவகச்சேரி - தனங்களப்பு- அறுகுவெளி ஐயனார் கோவிலடியில் இடம்பெற்ற டிப்பர்- மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பப் பெண் சம்பவ இடத்தில் உயிரி 19

## 815 கிலோ மஞ்சள் மீட்பு

கொழும்பு, செப். 7
கற்பிட்டி, ஏத்தாளை பகுதியில் சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 815 கிலோகிராம் மஞ்சள் நேற்று மீட்கப்பட்டுள்ளதுடன், 3 பேர் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட மஞ்சளின் பெறுமதி 30 இலட்ம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது என கடற்படையினர் 19

## தமிழர் அபிலாசைகள் உள்ளடங்கிய

# புதிய அரசமைப்பு உருவாக தமிழ் எம்.பிக்கள் ஓரணியாக வேண்டும்

## தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா வலியுறுத்து



யாழ்ப்பாணம், செப். 7

புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ள வரலாற்று முக்கியத்துவம்மிக்க காலகட்டத்தில், எமது நீண்ட கால அரசியல் நிலைப்பாடுகளை வலியுறுத்தும் அதே நேரத்தில், யதார்த்தங்களை மனதில் நிறுத்தி ஆக்கபூர்வமான ஓர் அணுகுமுறையை வகுத்து, அரசியல் மற்றும் இராஜதந்திர வழிமுறைகளின் ஊடாக எமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க சாத்தியமான சகல நடவடிக்கைகளையும் நாம் எடுத்தாக வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவரும் மூத்த சட்டத்தரணியுமான ந.சிறீகாந்தா தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விக்னேஸ்வரனுக்கு கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான தமிழ்த் தேசியக் கட்சியால் யாழ்ப்பாண நகரில் நேற்றுச் சனிக்கிழமை மாலை அளிக்கப்பட்ட வரவேற்பு நிகழ்வில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

225 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பில் 75 பேர். இவர்களில் ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள் 54 பேர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி என்று தமிழ்த் தேசியம் சார்ந்த மூன்று வெவ்வேறு அரசியல் அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மொத்தம் 13 பேர். மூன்று பேர் மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள். எஞ்சியுள்ள மூவரில் ஒருவர், முஸ்லிம் காங்கிரஸ் சின்னத்தில் போட்டியிட்டு வென்றவர். இன்னொருவர் முஸ்லிம் அரசியல் கட்சிகளின் கூட்டமைப்பு ஒன்றின் சார்பில் புத்தளம் மாவட்டத்திலிருந்து வெற்றியீட்டியவர். மற்றவர் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் ரிசாத் பதியுதீன். தேசியப் பட்டியல் மூலம் இன்னமும் நிரப்பப்படாமலிருக்கும் இரண்டு ஆசனங்களில் ஒன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குரியது. மற்றையது சிங்கள பௌத்த தீவிரவாதக் கட்சிக்கு உரியது.

அரச தரப்பை பொறுத்த வரையில் அதன் 150 உறுப்பினர்களில் சபாநாயகரைத் தவிர்த்துப் பார்த்தால், 149 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவர்களில் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியிலிருந்து இருவர் மற்றும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த பிள்ளையான் எனப்படும் சந்திரகாந்தனையும் சேர்த்து மூவர். இவர்களைவிட, மட்டக்களப்பிலிருந்து வெற்றியீட்டிய பொதுஜன பெரமுன உறுப்பினர் வியாழேந்திரனும், அவரைப்போலவே யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருக்கும் அங்கஜனும் உள்ளனர். இலங்கை தொழிலாளார் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மூவர் மலையகத்திலிருந்து தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த 8 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சேர்த்துத் தான் அரசு தரப்பில் 149 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

இந்த நிலையில் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதற்கு தேவைப்படும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையான 150 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற எண்ணிக்கையைப் பெறுவதற்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்மரினதும் ஆதரவு அத்தியவசியமானது.

எதிர்த்தரப்பான ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் தமிழ் முற்போக்குக் கூட்டணியில் ஆறு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்பதும் அதேபோல முக்கியமானது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ள இந்தச் சூழலில் முதற்கட்டமாக எதிரணியில் மூன்று அணிகளாகப் பிரிந்து நிற்கும் தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகளை ஒரு பொது நிலைப்பாட்டுக்கு கொண்டு வருவதற்கு நாம் விரைவாகவும் வேகமாகவும் முயற்சிக்க வேண்டும். பொறுமையோடும் விவேகத்தோடும் முயன்றால் அது சாத்தியமாகும் என்றே நாம் நம்புகிறோம்.

இந்தப் பொது நிலைப்பாட்டுக்கு, நாடாளுமன்றத்தில் எதிர்த்தரப்பிலும் ஆளுங்கட்சி வரிசைகளிலும் அமர்ந்திருக்கும் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதற்கு நாம் முயற்சிக்க வேண்டும். இது ஒன்றும் சுலபமானது அல்ல. குறிப்பாக, ஆளுங்கட்சி வரிசைகளில் அமர்ந்திருக்கும் தமிழ் உறுப்பினர்களின் ஆதரவைப் பெறுவதில், யதார்த்த ரீதியாக, பல்வேறு கஸ்டங்களும் நடைமுறைச் சிக்கல்களும் உள்ளன. அவர்களில் பலர் வெவ்வேறு பதவிப் பொறுப்புகளில் அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதை நாம் ஒரு போதும் மறந்து விட முடியாது. அதற்காக நாம் மனம் தளரவேண்டியது இல்லை.

எது எப்படி இருந்தாலும், புதிய அரசமைப்பு விவகாரம், தொடர்பில் எம் இனத்தின் நீதியான கோரிக்கைகளை முன் வைத்து நாம் செயற்பட்டேயாக வேண்டும் இது கட்டாயமானது. தவிர்க்கப்படமுடியாதது.

புதிய அரசமைப்பில் நீதி கிடைக்கவில்லையெனில், எமது பிரச்சினையை அடுத்த களத்துக்கு நகர்த்த வேண்டியிருக்கும். அது நிச்சயமாக சர்வதேச அரங்கமே! எமது பிரச்சனையில், சர்வதேச அரங்கில் பல நாடுகளின் ஆதரவு அல்லது அனுதாபம் எம் தரப்புக்கு தொடர்ந்து கிடைத்தவண்ணமே உள்ளது. ஒரு கதவு அடைக்கப்படும் போது இன்னொரு கதவு திறந்து கொள்கிறது என்கிற பொன்மொழியினை நாம் நினைவில் கொள்வது நல்லது, என்றார். (ஓ.5.26)

---

# சர்வதேசத்துடன் பயணிக்க வேண்டிய கட்டாயத்தில்தான் தமிழ்த் தரப்பினர்

## சுட்டிக்காட்டுகின்றார் சாள்ஸ் எம்.பி.

கொழும்பு, செப். 7

ஐ.நா. கூட்டத்தொடரில் தமிழர் விவகாரத்தில் தமிழ்த் தரப்பினர் ஒன்றிணைந்து சர்வதேசத்துடன் பயணிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் அரசு அமைக்கப்பட்டுள்ளது. பொதுஜன பெரமுனவின் ஆட்சியில் தற்போதைய ஜனாதிபதியின் சகோதரர் பிரதமராக வந்துள்ளார். அவர்கள், ஜனநாயகத்துக்கு ஆபத்தான 20 ஆவது திருத்தச்சட்டத்தை முன்மொழிந்துள்ளார்கள். அது, ஒற்றையாட்சி அல்லது ஒரு குடும்ப ஆட்சியாக மாறுவதற்கு பிரதானமான காரணமாக அமையவுள்ளது. அந்த ஒற்றையாட்சியில் தான் தமிழர்கள் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ஒற்றையாட்சியின் முழு அதிகாரத்தையும் ஒரு குடும்பம் பெற்றுக் கொள்கின்ற முறையில் சரத்துக்கள் மாற்றப்பட்ட வர்த்தமானி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எங்களுடைய மக்களுக்கு எதிராக நடத்தப்படுகின்ற எந்தவொரு செயற்பாட்டையும் நாங்கள் எதிர்ப்பதற்குத் தயாராகவே இருக்கின்றோம். 2021ஆம் ஆண்டு பங்குனி மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் இலங்கை தொடர்பான விடயத்தில் புலம்பெயர் உறவுகளுடன் இணைந்து தமிழர் தரப்பு அதனைக் கையாளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதன்படி, அனைவரும் ஒன்றாக இணைந்து ஐ.நா. ஆணையாளரிடம் எமது பிரச்சினையை முன் வைக்க வேண்டும் என்பதுடன் உறுப்பு நாடுகளுடனும் நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பேச்சில் ஈடுபடவேண்டும்" என்றார். (த-இ)

---

# பலமான அரச நிர்வாகத்துக்காகவே ஜனாதிபதிக்கு நிறைவேற்றதிகாரம்

## கூறுகின்றார் அமைச்சர் ரணதுங்க

கொழும்பு, செப். 7

நிறைவேற்று அதிகாரத்தை மைத்திரி ரணிலில் பங்குபோட்டுக்கொண்டதால் நாடு பெரும் விளைவுகளை எதிர்கொண்டது. பலமான அரச நிர்வாகத்தை மீண்டும் நிறுவவே ஜனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரம் முழுமையாக 20ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ளது இரட்டை குடியுரிமை கொண்டவர் அரசியலில் செல்வாக்குச் செலுத்துவதால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நல்லாட்சி அரசில் நிறைவேற்று அதிகாரம் ரணில் மைத்திரி ஆகியோருக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததால் நாடு சகல துறைகளிலும் வீழ்ச்சியடைந்தது. அரசமைப்பின் 19ஆவது திருத்தம் நாடாளுமன்றைப் பலப்படுத்துகின்றது என்று குறிப்பிட்டுக் கொண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைமை பலவீனப்படுத்தப்பட்டது. இறுதியில் நிறைவேற்றுத்துறையும், சட்டவாக்கத்துறையும் முரண்பட்டுக் கொண்டமை மாத்திரமே பெறுபேறாக அமைந்தது - என்றார். (த-இ)


# வெள்ளை இன நாவல் உழவனூரில் கண்டறிவு

கிளிநொச்சி, செப். 7

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலுள்ள உழவனூர் கிராமத்தில் தனியார் ஒருவரின் காணியில் அரியவகை வெள்ளை இன நாவல் இனம்காணப்பட்டுள்ளது. வல்லிபுரம் இராஜேந்திரம் என்பவரின் காணியிலேயே குறித்த வெள்ளை இன நாவல் மரம் இனம்காணப்பட்டுள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை தனது காணியில் உள்ள தோட்டக் கிணற்றை துப்புரவு செய்யும்போது குறித்த நாவல் மரத்தின் பழங்கள் வித்தியாசமாக இருப்பதனை அவதானித்த அவர் அதனைப் பிடுங்கி உண்ட போது அவை நன்கு பழுத்த நாவல் பழங்களாகக் காணப்பட்டுள்ளன.

நாவல் மரம் அதன் தோற்றம் என்பன வழமையான நாவல் மரம் போன்றே காணப்படுகின்றன. காய்களும் வழமையான நாவல் காய்கள் போன்றே உள்ளன. ஆனால் பழங்கள் மாத்திரம் வெள்ளை நிறமாக அதாவது நெல்லிக்காய் நிறத்தில் காணப்படுகின்றன. பழத்தின் சுவையும் வழமையான பழத்திலிருந்து வேறுபடுகின்றன.

குறித்த பிரதேசத்திலிருந்து சுமார் ஐந்து கிலோமீற்றர் தொலைவில் சுண்டிக்குளம் பறவைகள் சரணலாயம் காணப்படுகிறது. அங்கு அவ்வவ்போது பருவகால பறவைகள் வந்துபோவது வழமை. அங்கு வருகின்ற பருவகால பறவைகள் சில உழவனூர் கிராமத்தில் இவரது காணியின் அருகில் உள்ள சிறிய நீர்த்தேக்கத்துக்குள் காணப்படும் மரங்களில் இரவில் தங்குவது வழமை. அவ்வாறு வருகைதந்த பருவகால பறவைகளின் எச்சங்களால் குறித்த வெள்ளை இன நாவல் இங்கு உருவாகியிருக்கலாம் என்று அங்குள்ளவர்கள் நம்புகின்றனர். (கு-214)



# புலிகளின் தலைவர் பிரபாகரன் வீராப்புடைய, சிறந்த தலைவர்!

## எரிக் சொல்ஹெய்ம் பாராட்டு



**கொழும்பு, செப். 7**

**புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் சிறந்த தலைவராக, வீராப்பு உள்ள இராணுவத் தளபதியாக விளங்கினார். கொடுத்த வாக்கைக் காப்பற்றும் நேர்மை அவரிடம் இருந்தது. எங்கெல்லாம் போர் நிறுத்தம் செய்தாரோ அங்கெல்லாம் அவர் தாக்குதல் நடத்தவில்லை -. என்று தெரிவித்தார், இலங்கைக்கான நோர்வேயின் சமாதான தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.**

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உண்மையிலேயே பிரபாகரனை அடிக்கடி சந்தித்த தமிழரல்லாத ஒருவர் நானாகத்தான் இருக்க வேண்டும். சில வெளிநாட்டவர்கள் பிரபாகரனைச் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்புகள் உலகைப் பற்றிய ஒரு தவறானநோக்கைபிரபாகரனுக்குக் கொடுத்திருக்க வேண்டும்.

வெளியுலகை அவர் விளங்கிக்கொள்ளவில்லை. மேலும், பல வெளிநாட்டவர்கள் பிரபாகரனை சந்திக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் அவரும் விட்டுக்கொடுப்பைச் செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என்பதை அவர் உணர்ந்திருக்கக்கூடும். சமாதான இணக்க தீர்வு ஒன்று தேவையானால் இரு தரப்பும் விட்டுக்கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

பிரபாகரன் போ்ரின் இறுதிக்கட்டம் வரை நீண்டகாலம் ஒரு சிறந்த வீராப்புடைய இராணுவத் தலைவராக இருந்தார். உலகில் சொந்த விமானப்படையையும் கடற்படையையும் நிறுவிய அரசு அல்லாத தரப்பாக புலிகள் மாத்திரமே இருந்தனர். ஆனால், அவரின் அரசியல் விளக்கப்பாடு துரதிர்ஷ்டவசமாக இதைவிட பெருமளவு குறைவானதாகவே இருந்தது. இவருக்கு தென்னிலங்கை, இந்தியா மற்றும் வெளியுலகம் குறித்த இணக்கப்பாடு பெரிதாக இல்லை.

புலம்பெயர்ந்த தமிழர்கள் சமூகத்தில் இருந்த பலர் அவருக்கு தவறான ஆலோசனைகளை வழங்கினார்கள். நெருக்கடிக்குத் தீர்வொன்றை காண்பதைக் காட்டிலும் விட்டுக்கொ டாத ஒரு தலைவராக இருக்குமாறு அவருக்கு கூறினார்கள். சகல வாக்குறுதிகளையும் அவர் காப்பாற்றினார் என்பதை நாம் கூறத்தான் வேண்டும். எங்கெல்லாம் வாக்குறுதி அளித்தாரோ அங்கெல்லாம் இராணுவ நடவடிக்கையை நிறுத்தினார். அவரது படைகள் மீது அவருக்கு முழுமையான கட்டுப்பாடு இருந்தது. பாலசிங்கம்தான் அவரது பிரதான ஆலோசகரும் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கினார். பாலசிங்கத்தின் அறிவுரைகளை பிரபாகரன் கேட்டு நடக்கும் வரை அநேகமாக சகல விடயங்களுமே சரியான திசையில் சென்றன. ஆனால், பாலசிங்கத்தின் அறிவுரைகளை கேட்காத சந்தர்ப்பங்களில், எல்லாமே பிழையாகிப்போ னது.

அவரது தனிப்பட்ட ஆளுமை என்று வரும்போது நல்ல சுவையான சமையல்காரர். நாம் இருவரும் சேர்ந்து நல்ல உணவுகளைச் சாப்பிட்டிருக்கின்றோம். ஆனால், அவர் மிகவும் ஜாக்கிரதையான பேர்வழி. அவருக்கு நெருக்கமாக போவதென்பது சுலபமானதல்ல. பாலசிங்கத்தின் அறிவுரைகளை பிரபாகரன் முழுமையாக கேட்டிருந்தால் பல்வேறு விடயங்கள் வித்தியாசமானவையாக இருந்திருக்கும்.

நாம் முன்வைத்த யோசனையால் அந்த நேரத்தில் பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும் என்று நம்பினேன். எமது யோசனையை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா ஆகியன ஆதரித்தன. அது ஒரு வலிமையான யோசனை. நீங்கள் போரில் தோற்றுக்கொண்டு போகிறீர்கள் வெற்றிபெறுவதற்கு எந்த வழியும் இல்லை என்று பிரபாகரனிடம் கூறினோம். ஒவ்வொரு போராளியும் பதிவு செய்யப்பட்டு கப்பல் மூலம் தெற்குற்கு அல்லது வெளிநாட்டுக்கு கொண்டு செல்லப்படுவதே எமது யோசனையாகும்.

சரணடைந்த பிறகு எவருமே கொடுமைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்பதற்கு அமெரிக்காவினதும் இந்தியாவினதும் ஆதரவு கிடைத்தது. அந்த யோசனை பயனளிக்கும் என்று நாம் நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால், அதை 2009 ஏப்ரலில் பிரபாகரன் நிராகரித்து விட்டார் என்றார். (ம-இ)

# சிகிச்சையில் இருந்தவரிடம் ஹெரோய்ன் பவுடர் மீட்பு!

## போதைப்பொருளுக்காக அதற்கு முன்னர் அலைபேசி திருடினார் என்றும் அவர் மீது வழக்கு

போதைப் பொருள் பாவனையை நிறுத்த குடிவெறுப்பு சிகிச்சை நிலையத்தில் இணைவதற்காக, மருத்துவ விடுதியில் தங்கியிருந்த நபர் ஹெரோய்ன் பவுடர் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பாதுகாப்பு ஊழியரால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில்நேற்று மாலை இடம்பெற்றது. இது பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

கடந்த வியாழக்கிழமை (03.09.) அந்த சந்தேகநபர் கொடிகாமத்தில் தேங்காய் திருடினார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. அந்தநேரம் பொதுமக்கள் அவரைத் துரத்திச்சென்றபோது முட்கம்பி வேலியில் வீழ்ந்து காயமடைந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரைப் பொலிஸார் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர். மறுநாள் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர். அறிக்கையைப் பார்வையிட்ட நீதிவான் மருத்துவமனைக்குச் சென்று சந்தேகநபரைப் பார்வையிட்டார். போதைப் பொருளுக்காகவே திருடினேன் என்று சந்தேகநபர் கூறியுள்ளார். அவர் சாவகச்சேரி மருத்துவமனையிலுள்ள குடிவெறுப்பு நிலையத்தில் இணைந்து சிகிச்சை பெறவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

முட்கம்பி வேலியில் வீழ்ந்ததால் ஏற்பட்ட காயத்துக்கு விடுதியில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில் அவர் நேற்று பிற்பகல் மருத்துவமனையிலுள்ள சிற்றுண்டிச்சாலையில் தேநீர் அருந்தச்சென்று சிற்றுண்டி நிலைய உரிமையாளரின் அலைபேசியைத் திருடி அங்குள்ள மின்பிறப்பாக்கியினுள் மறைத்து வைத்திருந்தார்.

திருடப்பட்ட விடயம் அங்கு பரவியது. கடமையிலிருந்த பாதுகாப்பு ஊழியர் பணியில் அந்த நபருடன் தந்திரமாக கதைத்து அலைபேசியை மீட்டுக்கொடுத்திருந்தார்.

எனினும், அவருடைய நடவடிக்கைகள் சந்தேகத்தை ஏற்படுத்துவதாகக் காணப்பட்டது. அவரைப் பாதுகாப்பு ஊழியர் சோதனையிட்டார். அதன்போதே அவரிடம் ஹெரோய்ன் போதைப் பவுடர் இருந்தது தெரியவந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது. சந்தேகநபர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவர் விசாரணையில் உள்ளார் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (கு-9)

## பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் 30 லட்சம் ரூபாவில் சீரமைத்த மருத்துவ விடுதி கையளிப்பு

யாழ்ப்பாணம், செப். 7

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிறுவர் மருத்துவ விடுதி (8ஆம் இலக்க விடுதி) இன்று மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

புற்றளை பிள்ளையார் கோயிலடி அமரர் விஜயரட்ண குருக்கள், அமரர் சந்திரகுமாரி ஞாபகார்த்தமாக வல்வெட்டித்துறை அம்மன் கோயிலடியைச் சேர்ந்த சுவிட்சர்லாந்தில் வசிக்கும் மாதவன் ஐயா. கீதா தம்பதிகளின் 30 லட்சம் ரூபா செலவில் துரித சீரமைப்புத் திட்டத்தில் சிகிச்சை விடுதி சீரமைக்கப்பட்டு இன்று மருத்துவமனை நிர்வாகத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் கையளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எம்.எஸ்.சாள்ஸ் கலந்துகொள்ளவுள்ளார் என்று மருத்துவமனை அத்தியட்சகர் தெரிவித்தார். (கு-422)

வவுணதீவு அந்தோனியார் ஆலயம்

## சீரமைப்பின் பின் திறக்கப்பட்டது

மட்டக்களப்பு, ஏப். 7
மட்டக்களப்பு மாவட்டத்தில் வவுணதீவு பிரதேசத்தின் உன்னிச்சை 6ஆம் கட்டையில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயம் சீரமைப்பின் பின்னர் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

போர் மற்றும் அதன் தொடர்ச்சியான இடப்பெயர்வுகளால் கடந்த 40 ஆண்டுகளாக இந்த ஆலயம் கைவிடப்பட்டிருந்த நிலையில் தற்போது அது சீரமைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு முன்னாள் மாவட்டச் செயலர் மாணிக்கம் உதயகுமாரின் அயராத முயற்சியால் உருவாக்கப்பட்ட இந்த ஆலயம் மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை தலைமையில் மட்டக்களப்பு மாவட்டச் செயலர் திருமதி கலாமதி பத்மராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், மாநகர முதல்வர் ரி.சரவணபவன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சந்திரகாந்தா, வவுணதீவு உதவி பிரதேச செயலாளர் திருமதி சதா சுபா ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. (ம-150)

# எரிவடைந்த கப்பலை ஆராய நிபுணர் குழு

## இலங்கையை வந்தடைந்தது



கொழும்பு, செப். 7
**இலங்கையின் கடற்கரையில் இருந்து 40 கடல்மைல்களுக்கு அப்பால் தரிக்கப்பட்டிருக்கும் தீப்பற்றிய கப்பல் தொடர்பாக ஆராய்வதற்கும், விசாரணை செய்வதற்கும், மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வெளிநாட்டு நிபுணர்கள் சிலர் நேற்று இலங்கைக்கு வருகை தந்தனர்.**

கப்பல் உரிமையாளரின் ஏற்பாட்டில் மீட்பு நடவடிக்கை நிபுணர்கள், அனர்த்த மதிப்பீட்டாளர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்கள் உட்பட 10 பேர் அவ்வாறு வருகை தந்தனர் என்று அறிய முடிகின்றது. அவர்கள் பிரித்தானியா மற்றும் நெதர்லாந்து நாடுகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் கப்பலில் ஏற்பட்டுள்ள அனர்த்தம் தொடர்பான கருத்தறிவு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். அத்துடன் அவசர நிலைமைகளை கண்காணிப்பதற்காக இந்தியாவின் இரண்டு வானூர்திகள் தொடர்ந்தும் மத்தள வானூர்தித் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (ம-இ)

## சுவர் வீழ்ந்ததில் இளைஞன் சாவு

வவுனியா, செப். 7
சுவர் இடிந்து விழுந்ததில் காயமடைந்து சிகிச்சைபெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

மேசன் தொழில் செய்யும் இந்த இளைஞன் வவுனியா நகரில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில் பணியில் ஈடுபட்டிருந்த அவர் மீது கடந்த 30ஆம் திகதி சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் படுகாயமடைந்த இளைஞன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்தார். சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த காந்தி என்ற 24 வயதுடைய இளைஞனே உயிரிழந்தவர் ஆவார். (ம-110)

## தீப்பற்றிய கப்பலுடைய பணியாளர்கள் கைது?

கொழும்பு, செப். 7
இலங்கை கடற்பரப்பில் தீப்பற்றி எரிந்த நியூ டயமண்ட் கப்பலின் கப்டன் மற்றும் பணியாளர்களைக் கைதுசெய்வது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை சுற்றுச்சூழல் அதிகாரசபை, வணிகக்கப்பல் செயலகம் என்பன கோரியுள்ளன.

சங்கமன்கந்தை கடற்பரப்பில் தீப்பிடித்த நிலையில், கரையை நோக்கி அடித்து வரப்பட்ட எண்ணெய்க் கப்பல் நேற்று முன்தினம் மாலை, கரையிலிருந்து 40 கடல் மைலுக்கு அப்பால் இழுத்து செல்லப்பட்டது. தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தாலும், முழுமையாக தீ அணைக்கப்படவில்லையென்பது நேற்று வெளியான காட்சிகளில் புலப்பட்டது. நேற்று மாலையும் தீயணைப்பு பணிகள் தொடர்ந்தன.

கப்பலின் கப்டன் மற்றும் குழு உறுப்பினர்கள் விதிமுறைகளையும் அவர்களின் கடமைகளையும் பின்பற்றத் தவறிவிட்டனர் என்ற அவதானிப்புகளுக்குப் பிறகு அவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வணிகக் கப்பல் செயலக பணிப்பாளர் நாயகம் ஏ.டபிள்யூ.செனவிரத்ன, தீயைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் செய்யப்பட்ட செலவுகளுக்கு காப்பீட்டைக் கோருவது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கோரியுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க கப்பல் கப்டன் மற்றும் குழுவினர் கைது செய்யப்பட வேண்டும் என்று அவர் கூறினார். கப்பலின் கொதிகலனை கண்காணிக்கத் தவறியமை சரியான நேரத்தில் நடவடிக்கையெடுக்கத் தவறிமை ஆகிய குற்றச்சாட்டுக்களை கப்பன் எதிர்கொள்கிறார்.

காப்பீட்டு கோரிக்கைகள் குறித்து விவாதிக்க வெஸ்ட் ஒப் இங்கிலாந்து காப்பீட்டு நிறுவனம் நான்கு பிரதிநிதிகளை கொழும்புக்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுப்பியுள்ளது. இந்தக் குழு அடுத்த சில நாட்களில் கப்பலை ஆய்வு செய்ய உள்ளது.

கப்பலின் கப்டன் இந்திய கடலோர காவல்படையின் கப்பலிலும், ஏனைய 20 பணியாளர்கள் இலங்கை கடற்படையின் கப்பலிலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## மீண்டும் மின்னும் தங்கம்!!

யாழ்ப்பாணம், செப். 7
தங்கத்தின் விலை கடந்த வாரம் குறைவடைந்த நிலையில், தற்போது மீண்டும் விலை உயர்ந்துள்ளது.

யாழ்ப்பாணத்தில், நேற்று முன்தினம் நிலைவரப் படி ஒரு பவுண் தூய தங்கத்தின் விலை ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேபோன்று, ஆபரணத் தங்கத்தின் விலை 910 ரூபாவால் அதிகரித்து 91 ஆயிரத்து 660 ரூபாவாக விற்பனையாகிறது.


கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக தொழில் துறை தேக்கமடைந்து அதிகளவானோர் தங்கத்தில் முதலீடு செய்தனர். இதனால் தங்கத்திற்கு அதிக கேள்வி எழுந்தமையால் விலை அதிகரித்தது. (ம-இ)

## கட்டைக்காட்டில் நேற்று கசிப்புத் தளம் முற்றுகை!

கிளிநொச்சி, செப். 7
கிளிநொச்சி - கட்டைக்காடு பகுதியில் பொலிஸாரால் நேற்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கை யின்போது கசிப்புத் தளமொன்று முற்றுகையிடப்பட்டது.

176 லீற்றர் கசிப்பு இதன்போது மீட்கப்பட்டது.

தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹேரத் தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கசிப்பைக் காய்ச்சினர் என்ற சந்தேகத்தில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 176 லீற்றர் கசிப்பைத் தவிர்த்து ஆயிரத்து 190 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டது. சந்தேகநபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம-113)



## மீன்பிடிக்கு தடை விதிப்பு

கொழும்பு, செப். 7
படகுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவோர் இன்று மதியம் 12 மணி வரை கடலுக்குச் செல்ல வேண்டாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

வானிலையில் ஏற்பட்டுள்ள தளம்பல் காரணமாகவே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ம-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஏனிந்த ஓரவஞ்சனை?

தன்னுடைய குடிமக்கள் மீது ஆட்சியாளர்கள் கரிசனை கொள்வதும், அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதும் வரவேற்கக்கூடிய விடயங்களே. ஆனால் ஒரு கண்ணில் வெண்ணெயும் மறுகண்ணில் சுண்ணாம்பும் வைப்பது அரசுக்கு அழகல்ல.

சிங்கராஜவனத்தை ஊடறுத்து லங்காகம பகுதியில் இருந்து தெனியாய வரை வீதியமைக்கும் விவகாரம் பூதாகரமாகியிருக்கிறது.1988 இல் யுனெஸ்கோவால் உலக மரபுரிமையாக அங்கீகரிக்கப்பட்ட மழைக்காட்டினை, இப்படி ஒரு வீதியமைப்புக்காக சிதைப்பதா? என்று எதிர்ப்புக்குரல்கள் எழத் தொடங்கியுள்ளன. ஆனால் "எங்களுக்கு காடு முக்கியம் தான் . ஆனால் அதைவிட லங்காகம கிராம மக்களின் வாழ்வு முக்கியம். அடிப்படை வசதிகளற்ற மக்களுக்கு தங்கள் தேவையை மிகக் குறைந்த நேரத்தில் பெற்றுக்கொள்ளும் வகையில் இதனை அமைத்தே தீருவோம்" என கோத்தா அரசு ஒற்றைக்காலில் நிற்கிறது. லங்காகம கிராம மக்கள் மருத்துவ உதவியைப் பெறுவதென்றாலோ, மாணவர்கள் பாடசாலைக்கு போவதென்றாலோ சிங்கராஜா வனத்துக்கு மறுமுனையில் இருக்கும் தெனியாயவுக்குத்தான் போக வேண்டும். ஆனால் அப்படி போவது இலேசான காரியமல்ல. சிங்கராஜவனம் குறுக்கே நந்திபோல நீண்டு விரிந்து கிடக்கின்றது. எனவே சிங்கராஜ வனத்தைச் சுற்றி சுமார் 4 மணித்தியாலங்கள் மேலதிகமாகச் செலவிட்டே தெனியாயவுக்கு லங்காகம மக்கள் போக வேண்டிய நிலை.இதனை இல்லாமல் செய்யவே சிங்கராஜ வனத்தை ஊடறுத்து , எல்லா எதிர்ப்புகளையும் மீறி குறித்த வீதியை அரசு அமைத்து வருகின்றது.

இப்படி லங்காகம மக்கள் விடய்த்தை கண்ணில் வெண்ணெயை வைத்துப் பார்க்கும் அரசு, யாழ்ப்பாண மக்கள் விடயத்தில் மட்டும் சுண்ணாம்பை வைத்துப் பார்க்கிறது. அராலி-வல்லை வீதியில் இடைநடுவில் சில கிலோ மீற்றர்கள் இன்னமும் மக்களின் போக்குவரத்துக்காக திறந்துவிடப்படவில்லை. குறித்த வீதிதான் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்தவர்களும், அச்சுவேலியை அண்டியுள்ள பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குச் செல்வதற்கு பிரதானமாக உபயோகப்படுத்தியிருந்தனர். ஆனால் யாழ்.குடாநாட்டைப் படைத்தரப்பு கைப்பற்றி, வலி.வடக்கின் பெரும்பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டதோடு, அராலி-வல்லை வீதி துண்டிக்கப்பட்டது. வீதி நெடுகிலும் காவலரண்களும், முகாம்களும் அமைக்கப்பட்டன. வீதியின் சில பகுதிகளைக் குறுக்கறுத்து மண் அரண்களும் முளைத்தன. பின்னர் போர் மௌனிக்கப்பட்டு, இயல்பு வாழ்வு திரும்பி, வலி.வடக்கின் பல பகுதிகள் விடுவிக்கப்பட்ட போதும் கூட அராலி-வல்லை வீதி மக்கள் பாவனைக்காகத் திறக்கப்படவில்லை.

நல்லாட்சிக் காலத்திலும் அந்த வீதியைத் திறக்க எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் அவை எவையும் பயனளிக்கவில்லை. இதனால் இன்னமும் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவது போல வடமராட்சி, அச்சுவேலி, கதிரிப்பாய், இடைக்காடு போன்ற பகுதிகளைச் சேர்ந்த மக்கள் வேறுவீதிகளூடாக தூரத்தையும் , நேரத்தையும் அதிகமெடுத்து, அலைந்து திரிந்தே தெல்லிப்பழை வைத்தியசாலைக்கோ, அல்லது அராலி வரையான பகுதிகளுக்கோ செல்லவேண்டியுள்ளது. இத்தனைக்கும் இந்த வீதியின் இடைநடுவே ஒரு முகாம் இருப்பதாலேயே அந்த வீதியின் 4 கிலோமீற்றர் பகுதியை விடுவிக்க முடியாது எனப் படைத்தரப்பு பிடிவாதமாக இருக்கின்றது. இந்த சிறுதுண்டை விடுவிக்காததால் மொத்த வீதியையுமே பயன்படுத்த முடியாத துர்ப்பாக்கியம் மக்களுக்கு.

லங்காகம மக்களுக்காக காட்டையே ஊடறுத்து புதிய வீதியைப் அமைத்துக் கொடுக்கும் அரசு, ஏற்கனவே இருந்த வீதியை யாழ்ப்பாணத்து மக்களுக்காக விடுவிக்க மறுக்கும் ஓரவஞ்சனை ஏன்? என்ற கேள்விக்கு விடை " நீங்கள் வேறு நாடு நாங்கள் வேறு நாடு" என்பதாகவே இருக்கும்.

# 20ஆவது திருத்தச்சட்டவரைவு ஒரு தரப்பைச் சார்ந்திருக்கக் கூடாது

### சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவிப்பு



**கொழும்பு, செப். 7**
**நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடே 20ஆவது திருத்தச்சட்டவரைவு. இதை நாம் நிறைவேற்ற நாடாளுமன்றில் அனைவருடைய ஒத்துழைப்பும் அவசியமாகும்.**

இது நாட்டுக்காக மேற்கொள்ளப்படும் ஒரு செயற்பாடு. இது ஒரு தரப்பை மட்டும் சார்ந்து இருக்கக்கூடாது என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

20ஆவது திருத்தச்சட்டம் மூலம் தொடர்பாக ஆளும் தரப்பில் ஒரு விதமாகவும் ஏனைய கட்சிகள் இன்னொரு விதமாகவும் கருத்துக்களைக் கூறுகின்றன. இந்தநிலையிலேயே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

19 ஆவது திருத்தச்சட்டத்தை கடந்த அரசின்போது கொண்டு வந்தோம். ஒருவர்தான் எதிர்ப்பு வெளியிட்டார். நாட்டுக்கு நல்லது நடக்கும் என்று எதிர்ப்பார்த்தே அதனைக் கொண்டு வந்தோம். என்றார். (த-இ)



# முட்டை விலை 2 ரூபாவால் குறைவு!

கொழும்பு, செப். 7
முட்டையின் விலையை இரண்டு ரூபாவால் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

முட்டை உற்பத்தி சங்கத்தினருக்கும் பிரதமர் மஹிந்தவுக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற உரையாடலை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட் டுள்ளது.

புதிய தீர்மானத்தின் படி வெள்ளை முட்டையின் மொத்த விலை 19.50 ரூபாவாகவும், சிவப்பு முட்டையின் விலை 20 ரூபாவாகவும் குறைக்கப்ப டும் என்று சங்கத்தின் தலைவர் ஆர்.எம். சரத் தெரிவித்தார். மேலும், ஒரு வெள்ளை முட்டையின் சில்லறை விலை 21 ரூபாவாக வும், சிவப்பு முட்டையின் விலை 22 ரூபாவாகவும் குறைக்கப்ப டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

### 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு!

# எதிர்க்கட்சியிலும் சில கறுப்பாடுகள்

கொழும்பு, செப். 7
எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இரு பிரிவைச் சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் 20ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்படும்போது, அதற்கு ஆதரவளிக்க உள்ளோம் என உறுதியளித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது.

அரசின் முக்கிய பிரமுகரிடம் அவர்கள் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகள் அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன.

அதாவது, தனிநபருக்கு நிறைவேற்று அதிகாரம் தடையின்றி முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாத்திரமே குறித்த 20ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என இந்தக் கட்சிகள் தொடர்ந்து கூறிவருகின்றன.

இந்த நிலையில் எதிர்க்கட்சியை சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# இந்திய மத்திய அரசுடன் பேச கூட்டமைப்பு இராஜதந்திர முயற்சி

கொழும்பு, செப். 7
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இந்திய மத்திய அரசுடன் பேச்சு நடத்துவதற்கான இராஜந்திர முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்று கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கைக்கான இந்தியத் தூதுவரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியபோது இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு கூட்டமைப்பு தரப்பில் கோரிக்கை விடுக்கப்ப ட்டுள்ளது.

எனினும், இது தொடர்பாக புதுடில்லியிலிருந்து உறுதியான பதில் இதுவரை கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை டில்லிக்கு அழைத்துப் பேச்சு நடத்துவதற்கு பிரதமர் மோடி, முன்னர் இலங்கை வந்திருந்தபோது விருப்பம் வெளியிட்டிருந்தார். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றாலும் பின்னர் பயணம் பிற்போடப்பட்டது.

இதேவேளை, இந்தியாவின் தலையீட்டுடன் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டம், புதிய அரசமைப்பின் ஊடாக மாற்றியமைக்கப்படலாம் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இவ்வாறானதொரு பின்புலத்தில், புதிய அரசமைப்பின் ஊடாக தமிழர்களுக்கான தீர்வைப் பெறுவதற்கு இந்தியாவின் தலையீட்டைக் கூட்டமைப்பு கோரவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு டெல்லி இராஜதந்திர மட்டத்திலான அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்படவுள்ளது. (த-இ)

## இந்திய இழுவைப் படகுகளின்
# அத்துமீறலை கண்டித்து மன்னாரில் கவனவீர்ப்பு

மன்னார்,செப்.7

**இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய படகுகளின் எல்லை தாண்டிய அத்துமீறலைக் கண்டித்து, பேசாலை மீனவ சமூகத்தால் கவன வீர்ப்பு போராட்டம், ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8 மணிக்கு பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய முன்றிலிருந்து போராட்டம் ஆரம்பிக்கப்படும்.

அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று பேசாலை ஞானப்பிரகாசியார் சிலையடியில் மாலை 4 மணி வரை அனைத்து மீனவர்களின் குடும்பங்களும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

கடல்வாழ் உயிரினங்களின் உற்பத்திக் கருவூலமாகத் திகழ்கின்ற மன்னார் கண்டமேடையைக் குறிவைத்து, பெருந்தொகையான இந்திய இலுவைப்படகுகள் படையெடுத்துள்ளன. இதனால் நீண்டகாலமாக இலங்கையின் வடக்கு, மேற்கு கரையோர மக்களின் வாழ்வாதாரம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அன்றைய தினம் மீன வர்களின் தொழில் நடவடிக்கைகளும் முடக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-60)



சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் பழைய மாணவர்களான இ.குமரன், இ.குகன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் கட்டப்பட்ட, கல்லூரியின் ஸ்கோர் போர்ட் கட்டடம் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்பட்டது. முன்னாள் பிரதி அதிபர்களான சி.மகேந்திரன் மற்றும் இ.ஜோர்ஜ் ஆகியோர் கட்டடத்தைத் திறந்தனர். (க)



## புலமைப்பரிசில் பரீட்சைக்கு முன்னோடிக் கருத்தரங்கு

கிளிநொச்சி, செப். 7

இந்த வருடம் இடம்பெறவுள்ள தரம் 5 மாணவர்களுக்கான பரீட்சைக்கான முன்னோடிக் கருத்தரங்குபளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் 1987ஆம் ஆண்டு உயர்தரம் கற்ற மாணவர்களின் ஏற்பாட்டில் கிளிநொச்சி வலயக்கல்வி அலுவலகத்தின் ஆரம்பப் பிரிவும் இணைந்து இந்தக் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டிருந்தது. 3 வளவாளர்கள் கருத்தரங்கை நடத்தினர். நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ம)

## விபத்தில் காயமடைந்த முதியவர் நேற்று சாவு

வவுனியா,செப்.7

ஹொறவப்பொத்தானையில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற விபத்தில் காயமடைந்திருந்த முதியவர், சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

வீதியால் நடந்து சென்றவர் மோட்டார் சைக்கிள் மோதி படுகாயமடைந்தார். அவர் மீட்கப்பட்டு பிரதேச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைகளுக்காக வவுனியா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

சம்பவத்தில் ஹொறவப்பொத்தானையைச் சேர்ந்த மஜீத் வயது 68 என்ற முதியவரே சாவடைந்துள்ளார். (க-110)

## பெண்களின் பிரச்சினைகள் விழிப்புணர்வு கருத்தரங்கு



யாழ்ப்பாணம், செப். 7

பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பான சட்ட ஆலோசனை பெற்றுக்கொள்ளும் விழிப்புணர்வு கருத்தமர்வு இன்று கிளிநொச்சியில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

குறித்த செயலமர்வு நேற்றுக் காலை 10 மணியளவில் கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் ஆர்.பானுஜா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பாலியல் லஞ்சம், பாலியல் சுரண்டல், விவாகரத்து, தாபரிப்பு, வன்முறைகள் தொடர்பான பிரச்சினைகளுக்கு சட்ட ரீதியான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. சுமார் 150 பேர் இந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டனர். (ம-150)

## விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

மட்டக்களப்பு,செப்.7

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலை, ஆறுமுகத்தான்குடியிருப்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற வீதி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

விபத்தில், கொம்மாதுறை கலைவாணி வீதியைச் சேர்ந்த கிட்ணபிள்ளை குபேந்திரன் (வயது 46) என்பவரே உயிரிழந்துள்ளார்.

ஆறுமுகத்தான் குடியிருப்பிலுள்ள தேவாலயத்தில் ஆராதனையில் பங்குபற்றி விட்டு, சைக்கிளில் பிரதான வீதியூடாக வீடு திரும்பும் போது, பின்னால் வந்த டிப்பர் மோதி விபத்து நடந்துள்ளது.

சடலம் ஏறாவூர் ஆதார மருத்துவமனையில் உடற்கூற்றாய்வுப் பரிசோதனைகளுக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக, டிப்பரின் சாரதி ஏறாவூர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (க-இ)

# ஆதனவரியைக் குறைக்காவிடில் மக்களைத் திரட்டிப் போராட்டம்

கிளிநொச்சி,செப்.7

கரைச்சி பிரதேச சபையால் அறவிடப்படவுள்ள ஆதன வரியைக் குறைக்காது விடின், பாதிக்கப்படவுள்ள மக்களை ஒன்றுதிரட்டி வெகுஜனப் போராட்டம் மேற்கொள்ளப்படும் என்று கரைச்சி பிரதேச சபையின் சமத்துவக் சட்சி உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் கட்சி அலுவலகத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டம் வறுமையில் முன்னிலையில் இருக்கிறது. பெரும்பாலான மக்கள் மூன்று வேளை உணவு உண்ணுவதே கேள்விக்குரியது.

போரின் பாதிப்புக்களை முழுமையாக எதிர்கொண்டு படிப்படியாக மீண்டு வரும் மாவட்டமாகக் காணப்படுகிறது.



இப்படியான ஒரு மாவட்டத்தில் புதிதாக ஆதனவரி அறவிடுகின்ற போது, எடுத்த எடுப்பிலேயெ பத்து வீதம் என்கின்ற அதிகரித்த வீதத்தில் அறவிடுவது மக்களை பெரும் சுமைக்குள் தள்ளிவிடும். மேலும் புதிதாக ஆதனவரி அறவிடுவதற்கு மக்களின் ஆதனங்களின் மதிப்பீடுகள் தற்போதைய சந்தை பெறுமதியில் மதிப்பிடப்பட்டன.

எனவே சொத்துக்களின் பெறுமதியும் தற்போதைய சந்தை பெறுமதியில் அதிகரித்துக் காணப்படும். இந்த நிலையில் இந்த அதிகரித்த பெறுமதிக்கு அதிக வீதத்தில் வரி அறவிட்டால், அது மக்களை மேலும் நெருக்கடிக்குள் தள்ளிவிடும்.

இதனை அந்த மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபையானது மக்களுக்கானதாக இருக்க வேண்டுமே தவிர, மக்களுக்கு எதிரானதாக இருக்கக் கூடாது. ஆனால் கரைச்சி பிரதேச சபையின் செயற்பாடுகள் மக்கள் நலன்களுக்கு அப்பால், கட்சி நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. தன்னிச்சையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கரைச்சி பிரதேச சபை இதனை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லை எனில் நாம் மக்களைத் திரட்டி வெகுஜன போராட்டத்தை மேற்கொள்வோம்- என்றனர். (க)



# இன்றைய நாள்

**மேடம்:** நிம்மதியான நாள். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். மேலதிகாரி உங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பார். முயற்சி செய்த ஒரு விஷயம் முடியும். கலைத்துறை யினருக்கு வெற்றிப்பாதை தென்படும்.

**இடபம்:** முன்னேற்றங்கள் காணும் நாள். உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். ரோகிணி: நண்பர்களுடன் மனம் விட்டு பேசுவீர்கள். பணியாளர்களுக்கு ஏற்பட்டிருந்த கவலைகள் தீரும்.

**மிதுனம்:** பிரச்சினைகள் தீரும் நாள். பல நாட்களுக்குப் பிறகு மன மகிழ்ச்சி கூடும். நிதி தேவைகள் ஓரளவு நிறைவடையும். சக ஊழியர்களிடையே இருந்த சண்டைகள் நீங்கும்.

**கடகம்:** நல்லவர்களின் ஆதரவைப் பெறும் நாள். எதிர்பார்த்த இடத்திலிருந்து சுபச்செய்தி வரும். வருமானம் சற்றே உயரும். பெரியோர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

**சிம்மம்:** பணியாளர்களுக்குத் தொல்லை கொடுத்த மேலதிகாரி விலகுவார். வியாபாரத்தில் இருந்த போட்டிகள் குறையும். பெற்றோர்களை அனு சரித்து சென்றால் மட்டுமே அவர்களது அன்பை பெற முடியும்.

**கன்னி:** எச்சரிக்கையாக இருக்க வேண்டிய நாள். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அதிகரிக்கலாம் . செலவுகளை குறைத்துக் கொள்வது நல்லது.பகையைச் சம்பாதிக்க வேண்டாம்.

**துலாம்:** பணியாளர்களின் சுமை கூடும் நாள். உறவினர்கள் செயல்பாடுகளால் செலவுகள் அதிகமாகும். பெற்றோரின் ஆரோக்கியம் சற்று குறையும். வியாபாரம் சுமாரான லாபம் தரும்.

**விருச்சிகம்:** தடுமாற்றம் அகலும் நாள். பிரபலமானவர்களின் சந்திப்பால் பிரச்னைகள் தீரும். வில கிய சொந்தம் உங்கள் முயற்சி காரணமாக இணையும்.

**தனுசு:** நிதானத்துடன் செயல்பட வேண்டிய நாள். கடன் பிரச்னை சற்றே குறையும். பெண்களுக்கு மனகுழப்பம் ஏற்படும். சுப முயற்சிகள் தள்ளிப் போகக்கூடும்.

**மகரம்:** புதிய விஷயம் கற்கும் நாள். முயற்சியில் பொறுமை தேவை. வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்கள் கிடைப்பர். உறவினருடன் எதிர்பார்த்த அளவு நெருக்கம் இருக்காது.

**கும்பம்:** பழைய தவறுகளுக்கு வருந்தும் நாள். வாகனம் ஓட்டுகையில் கவனம் தேவை. அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும்.

**மீனம்:** கவலைகள் தீரும் நாள். புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம். சதயம்: பணியாளர்கள் உற்சாகத்துடன் செயல்படுவீர்கள். உறவினரைத் தொடர்பு கொள்வதால் நல்லது நடைபெறும்.

# நடைபாதையில் வாகனங்கள் தரிப்பு; விரைவில் கடுமையான சட்டம் அமுல்

கொழும்பு, செப்.7

நடைபாதையில் வாகனங்களை நிறுத்துவது தொடர்பில் எதிர்வரும் நாள்களில் கடுமையான சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. பொலிஸ் போக்குவரத்து தலைமையகத்துக்குப் பொறுப்பான இயக்குநர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க ஹப்புகொட இதனைத் தெரிவித்துள்ளார். மேலும், கிரேன்கள் அல்லது சில பொருள்களைப் பயன்படுத்தி நடைபாதையில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை அகற்ற நேரிடும். அதற்காக செலவாகும் பணத்தை உரிமையாளர்கள் செலுத்த நேரிடும். அத்துடன் வாகனங்களுக்கு



ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதனையும் உரிமையாளர்கள் ஏற்க நேரிடும் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந-இ)

மன்னாரில்

## உபஉணவுப் பயிர்ச்செய்கை இலக்கைவிடவும் அதிகரிப்பு!

மன்னார், செப். 7

மன்னார் மாவட்டத்தில் 2020ஆம் ஆண்டின் சிறுபோகப் பயிர்ச் செய்கையில் சௌபாக்கியா திட்டத்தின் கீழ் உப உணவுப் பயிர்ச்செய்கை ஊக்குவிக்கப்பட்டு 300 ஹெக்ரேயர் என இலக்கு வைக்கப்பட்டபோதும் இந்த அடைவுமட்டம் மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என மன்னார் உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

வீட்டுத் தோட்ட செய்கைகளும் ஊக்குவிக்கப்பட்டு பத்தாயிரம் பைக்கற்கள் 20 ரூபா வீதம் விநியோகிக்கப்பட்டு வீட்டுத் தோட்டச் செய்கைகளும் ஊக்குவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-60)

## நாட்டில் கொரோனா ஆபத்து நீங்கவில்லை

கொழும்பு, செப்.7

நாட்டில் சமூகத்திற்குள் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றாலும் கொரோனா ஆபத்து நீங்கவில்லை என வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

இதனால் உரிய முறையில் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு ஸ்தாபனத்தின் விசேட வைத்தியர் ஜுட் ஜயமஹ தெரிவித்துள்ளார். மேலும், சமூகத்திற்குள் பரவலாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பி.சி..ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

பொருத்தமற்ற நடத்தை

## 100 பதின்ம வயது ஜோடிகள் கைது

அநுராதபுரம், செப்.7

100ற்கும் மேற்பட்ட பதின்ம வயது காதல் ஜோடிகளை அநுராதபுரம் பொலிஸார் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

தனியார் வகுப்புக்களுக்குச் செல்வதாகக் கூறிவிட்டுப் பொதுஇடங்களில் அருவருக்கத்தக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்டவர்கள் அவர்களுடைய பெற்றோரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-இ)

## தமிழ் மாணவி ஒருவர் ஒக்ஸ்போர்ட்டுக்கு தெரிவு

கொழும்பு, செப்.7

லண்டனில் கல்வி கற்று வரும் தமிழ் மாணவி சுவிகா குமாரவேலு உயர்தரப் பரீட்சையில், மருத்துவத்துறையில் 4 பாடங்களிலும் மிகத் திறமையான சித்திகளைப் பெற்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

இந்தப் பரீட்சை முடிவுகளை தான் எதிர்பார்க்கவில்லை என்று அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். சுவிகாவின் தாயாரும் தனது மகள் பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாகக் கூறியுள்ளார். அவர் பிரெஞ்ச் கதைப்பதிலும் மிகவும் திறமையானவர் எனத் தெரியவருகிறது. அவர் படித்த பாடசாலைக்கு ஒருமுறை பிரித்தானிய மகாராணி சென்றபோது ராணியை பிரெஞ்ச் மொழியில் வரவேற்பதற்காக சுவிகா தெரிவுசெய்யப்பட்டிருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (ற-இ)

# எரியூட்டப்படும் கழிவுகளால் சுற்றுச்சூழலுக்கு ஆபத்து!

கொழும்பு, செப்.7

கொழும்பு புறநகர் பொரலஸ்கமுவவில் அமைந்துள்ள சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனைக்கு இறுதி எச்சரிக்கையை விடுக்க மத்திய சுற்றாடல் ஆணையகம் தயாராவதாக தெரிவிக்கப்பட் டுள்ளது.

மருத்துவமனையில் எரியூட்டப்படும் கழிவுகள் காரணமாக அருகில் உள்ள குடியிருப்பாளர்க ளுக்கு பாதிப்பு ஏற்படுவதாகக் கூறியே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட வுள்ளது.

எரியூட்டப்படும் கழிவுகளில் இருந்து வெளிவரும் புகை காரணமாக தமது சுற்றுச்சூழல் மாசடைகின்றது எனவும், இதனால் தமக்கு சுவாசப் பிரச்சினை ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன என குடியிருப்பாளர்கள் முறை யிட்டுள்ளனர்.

ஏற்கனவே இது தொடர்பில் அறிவுறுத்துவதற்காக மத்திய சுற்றாடல் ஆணையக அதிகாரிகள் மருத்துவமனைக்குச் சென்று உரிய வழிகாட்டல்களை வழங்கியபோதும் மருத்துவமனை தொடர்ந்தும் தமது நடவடிக்கைகளை நிறுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பிரச்சினைக்குத் தீர்வு இல்லையெனில் நீதி மன்றத்தின் உதவியை நாடவுள்ளோம் என மத்திய சுற்றாடல் ஆணையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ந-இ)

# இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் விரைவில் இலங்கையில் உற்பத்தி



**கொழும்பு, செப்.7**
**இறக்குமதி செய்யப்படும் சில மருந்துகள் அடுத்த 18 மாதங்களில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாப னத்தின் ஊடாக, ஔடத உற்பத்திகள் வழங்கல்கள் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவின் மேற்பார்வையில் உற்பத்தி செய்யப்படும் என அமைச்சின் செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.**

மேலும், மருந்துகளைத் தயாரிக்க ஆரம்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
புற்றுநோய் மருந்துகளைத் தயாரிக்க மற்றொரு தொழிற்சாலை அமைக்க கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. தொற்றா நோய்கள் அல்லாத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நோயாளி மருந்துகளை வாங்க சுமார் 150,000 ரூபா செலவிட வேண்டும், சில சமயங்களில் புற்றுநோய் நோயாளி ஒருவருக்கு மருந்துகளுக்கு ஒரு மில்லியன் ரூபா தேவைப்படுகிறது.
இந்நிலையில், மொத்த மருந்துகளின் தேவையில் 15 சதவீதம் மட்டுமே அரச மருந்தாக்கல் கூட்டுத் தாபனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)



## நன்னீர் மீன்வளத்தை மேம்படுத்தல் வியாபாரத் திட்டமிடல் நிகழ்வு

முல்லைத்தீவு, செப்.7
உலக உணவுத்திட்ட செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்றிட்டங்களில் ஒன்றான கிராம மட்ட நீர்நிலைகளில் நன்னீர் மீன்வளத்தை மேம்படுத்தல் திட்டத்தின் அமுலாக்கத்திற்குத் தேவையான "வியாபாரத் திட்டமிடல் நிகழ்வு" பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த 4ம் மற்றும் 5ம் திகதிகளில் நடைபெற்றது.
இப் பயிற்சிநெறியானது தேசிய நீர் உயிரினவளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் விரிவாக்கல் பகுதி பணிப்பாளர் திருமதி .புஸ்பலதா தலைமையில் நடைபெற்றது.
மேற்படி பயிற்சிநெறியில் பிரதேச செயலாளர், தென்னியன்குளம் கிராமிய நன்னீர் மீன்பிடி சங்க உறுப்பினர்கள், குறிப்பிட்ட திட்ட அமு லாக்கத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட கிரா மங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ந-222)

ஹெறோய்ன் கொண்டு சென்ற

## இலங்கை பொலிஸ் தமிழ்நாட்டில் கைது

கொழும்பு, செப்.7
23 கிலோ கிராம் ஹெறோய்ன் போதைப் பொருளை கபுகஸ்கந்தை பிரதேசத்திற்கு எடுத்துச் சென்ற கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் இந்தியாவின் தமிழ் நாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
அவர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அல்லது திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளின் உதவியுடன் இந்தியாவுக்கு தப்பிச் சென்றாரா என்ற கோணத்தில் விசாரணை நடத்தப்படவுள்ளது.
சட்டவிரோதமாக கடல் வழியாக இந்தியாவுக்குள் பிரவேசிக்க முயன்ற போதே தமிழகப் பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். (வ-இ)



கொடிகாமம் வடக்கு கேசரப்பிட்டி பெரிய தம்பிரான் பிள்ளையார் உடனுறை காளியம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவ தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆலய பிரதம குரு சிவசிறீ நீலகண்டக் குருக்கள் தலைமையில் இடம் பெற்றது. (ந-159)

## குளத்தில் சடலம் மீட்பு

பதுளை, செப்.7
பதுளை தெமோதரை சௌதம் தோட்டம் மேற்பிரிவில் அமைந்துள்ள குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.
சடலம் குளத்தில் மிதப்பதை கண்டு பிரதேச மக்களால் எல்ல பொலிஸாருக்கு தெரியபடுத்தியதையடுத்து சடலம் எல்ல பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் சௌதம் மேற்பிரிவைச் சேர்ந்த 74 வயதையுடைய பெரியம்மன் பெரியான் என்பவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரேத பரிசோதனைக்காக சடலம் பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பபட்டுள்ளது. (வ-0இ)

புதிய ஆசிரிய ஆலோசகர் சேவைக்குள்

## 20 பாடங்கள் உள்ளீர்ப்பு

கொழும்பு, செப்.7
கல்வி அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ஆசிரிய ஆலோசகர் சேவையினுள் மொத்தமாக 20 பாடங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.
புதிய கல்விச் சீர்திருத்தம் கல்வி அமைச்சர் ஜீ.எல். பீரி ஸால் முன்வைக்கப்படவுள்ள நிலையில், அச் சீர்திருத் தத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பாடங்கள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இதில் முதன்மைப் பாடங்கள், தொகுதிப் பாடங்கள் மற்றும் அத்தோடு தொழில்நுட்பப் பாடங்கள் அடங்குகின்றன.
ஆசிரிய ஆலோசகர் சேவை பிரமாணக் குறிப்பில் ஆசிரிய ஆலோசகர் பதவிக்குரிய நியமனப் பாடங்கள் காணப்படாவிட்டால் தற்போது மேற்பார்வை செய்யும் பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளது.
சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் சேவைப் பிரமாணக்குறிப்பு செயலுறுப்பெறும் தினத்திலிருந்து 5 வருட காலத்துக்குள் முதலாவது வினைத்திறன்கான் மற்றும் இணைப்பு மொழி சித்தி அடைவதும் அவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

## விபத்தில் துண்டாகிய கையை இணைப்பதற்கு கடும் முயற்சி

இரத்தினபுரி, செப்.7
விபத்தில் துண்டாகிய இளைஞனின் கைப் பகுதியை இணைக்க மருத்துவர்கள் கடும் முயற்சி எடுத்துள்ளனர் என இரத்தினபுரி அரச வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவின் வைத்தியர்கள் நேற்றுமுன்தினம் தெரிவித்தனர்.
இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும் தனியார் பஸ் வண்டியும் இரத்தினபுரி எம்பிலிப்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் மாலை விபத்துக்குள்ளாகின.
இதன்போது தனியார் பஸ் வண்டியின் பின் ஆசனத்தின் வலது பக்க மூலை ஜன்னலில் கையை வைத்தவாறு அந்த இளைஞன் பயணித்துள்ளார். இ.போ.ச. பஸ் வண்டி மோதியதில் யன்னலில் கை வைத்திருந்த இளைஞனின் கை துண்டிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். கையை இழந்தவர் கொடக்கவெல பிரதேசத்தை சேர்ந்த 20 வயதான இளைஞர் எனவும் இ.போ.ச. பஸ் வண்டியின் சாரதியை கைது செய்துள்ளோம் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-இ)

## திடீர் பரிசோதனையில் கரைச்சி பிரதேச சந்தைகள்

கிளிநொச்சி. செப். 7
கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் சந்தைகள், வீதியோரங்களில் இயங்கும் மரக்கறி மற்றும் கடலுணவுகள் விற்பனை பிரிவுகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.
கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் கரைச்சி பிரதேச சபை செயலாளர் பிரதேச அலுவலர்கள் இணைந்து திடீர் பரிசோதனைகளை நடாத்தினர்.
பரிசோதனையின் போது பழுதடைந்த மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவுகள் பறிமுதல் செய்யப்பட்டு வியாபாரி களின் சம்மதத்துடன் அழிக்கப்பட்டன.
பழுதடைந்த மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவுகள் விற்பனை செய்தவர்கள் சுகாதார பகுதியினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு இனிவரும் காலங்களில் பழுதடைந்த பொருள்கள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர். (ந-9)

## தீர்வையின்றி வந்த சிகரெட்டுக்கள் மீட்பு

கொழும்பு, செப்.7
தீர்வையின்றி நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஆயிரம் சிகரெட்டுக்கள் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த நிலையில் மட்டக்குளி பேகியுசன் பகுதியில் வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (வ)





கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்து பௌத்த கலாசார பேரவையின் செயலாளரும் வட மாகாணத்துக்கான ஜனாதிபதியின் ஆலோசகருமான எம்.சி.எஸ் இராமச்சந்திரனால் இலவச சிங்கள மற்றும் ஆங்கில பாட கற்கைநெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ந-113)

மட்டு.வேத்துச்சேனை கிராமத்தில்


# அதிகாலை வேளையில் காட்டுயானைகள் அட்டகாசம்

## மயிரிழையில் தப்பிய மக்கள்

மட்டக்களப்பு, செப்.7

**மட்டக்களப்பு வேத்துச்சேனை கிராமத்துக்குள் நேற்று அதிகாலை புகுந்த காட்டு யானைகள் மக்களின் வீடுகளை உடைத்து அட்டகாசம் புரிந்துள்ளன.**





இந்தச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது:

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பிரதேசத்தின் போரதீவுபற்று பிரதேச செயலாளர் பிரிவுக் குட்பட்ட வேத்துச்சேனைக் கிராமத்துக்குள் காட்டுயானைக் கூட்டம் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் புகுந்துள்ளது. கிராமத்திற்குள் புகுந்த அவை வீடுகளை அடித்து உடைத்துள்ளன.

வீடுகளில் மக்கள் தமது உணவுக்காக வைத்திருந்த நெல் மூடைகளையும் உண்டு சேதப்படுத்தி, வேலிகள், மற்றும் நெல் குற்றும் ஆலை ஒன்றையும் முற்றாக அடித்து உடைத்துவிட்டுச் சென்றுள்ளன. இது தொடர்பில் கிராமவாசி ஒருவர் தெரிவிக்கும் போது, ஆழ்ந்த உறக்கத்திலிருந்த எமக்கு அதிகாலை ஒரு மணியளவில் வெளியில் ஏதோ சத்தம் கேட்டது நான் மாத்திரம் வெளியில் வந்து பார்த்தேன் மிகவும் உயரமான யானை ஒன்று எமது வீட்டை நோக்கி வருவதை அவதானித்தேன் பின்னர் நான் உறக்கத்திலிருந்த மனைவி, பிள்ளைகளை எழுப்பிக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறி வீதிக்கு வந்துவிட்டோம். பின்னர் இன்னுமொரு யானை வந்து இரண்டு யானைகளுமாக எமது வீட்டின் முன் சுவர் பகுதியை உடைத்து உள்ளிருந்த 12 நெல் மூடைகளையும் இழுத்து நிலத்திலே கொட்டி சேதப்படுத்தின. யானைகள் எமது வீட்டை உடைப்பதை அவதானித்த நாம் அயலவர்களின் உதவியுடன், தீப்பந்தம் ஏந்தியும், உரக்கச் சத்தமிட்டும் யானைகளைத் துரத்த முயற்சித்தோம், எம்மைப் பொருட்படுத்தாத யானைகள் எம்மைத் தாக்குவதற்கு துரத்தி வந்தன. நாம் வீட்டிற்குள்ளே உறக்கத்திலிருந்து எழும்பாமல் இருந்திருந்தால் எமது 4 பிள்ளைகளும் நாமும், உயிரிழந்திருப்போம் என்றார். வேத்துச்சேனை கிராம அபிவிருத்தி சங்கத்தின் தலைவர் எஸ்.கமலேஸ்வரன் தெரிவிக்கையில், சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் பாதுகாப்பு பிரிவினருக்கு அறிவித்துள்ள போதிலும் நாங்கள் காட்டுயானைகளை வெளியேற்றிய பின்னர்தான் அவர்கள் வந்தார்கள், எம்மிடம் யானை வெடிகள்கூட இல்லை கிராம சேவகர் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார் எனத் தெரிவித்தார். (வ-46)

வாழைக்குலைகள் திருட்டு:

# ஒருவர் மடக்கிப் பிடிப்பு இருவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், செப்.7

வாழைத் தோட்டங்களில் வாழைக்குலைகளைக் களவெடுத்த நபர் ஒருவர் வாழைக்குலைகளுடன் பிடிபட்டு அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கடந்த இரண்டு மாதகாலமாக ஏழாலைப் பகுதியில் வாழைக்குலைகள் அதிகளவில் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் நேற்றுமுன்தினம் ஏழாலை மத்தி தோப்புப் பகுதியிலுள்ள வாழைத் தோட்டத்தில் சந்தேகத்திற்கிடமான நிலையில் மூவர் வாழைக்குலைகளை வெட்டி சைக்கிளில் கொண்டு செல்ல முற்பட்ட வேளை, அயலில் வசிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் இதனை அவதானித்து இவர்களை விசாரித்துள்ளார்.

வாழைக்குலைகளுடன் நின்ற மூவரும் தப்பியோட முயற்சிக்கும்போது, பொலிஸ் உத்தியோகத்தரும் தனியார் பஸ் உரிமையாளர் ஒருவரும் இவர்களைத் துரத்திச் சென்ற நிலையில் இருவர் தப்பிச் சென்றுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய மூன்றாவது நபரை மடக்கிப் பிடித்து சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (ற-39)

# இறைச்சிக்கு கடத்திய 11 மாடுகள் மீட்பு

வவுனியா, செப்.7



வவுனியா நெடுங்கேணியிலிருந்து மதவாச்சி நோக்கி இறைச்சிக்காக கடத்திச்செல்லப்பட்ட 11 மாடுகளை நேற்று அதிகாலை மடுக்கந்த பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த மாடுகள் நெடுங்கேணியிலிருந்து மாமடுப் பகுதியூடாக அனுமதிப்பத்திரம் இன்றி மதவாச்சி நோக்கி கொண்டு செல்லவிருந்த நிலையில், மடுகந்தைப் பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவற்றை மீட்டுள்ளனர்.

மாடுகளை கடத்திச் செல்லப் பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனத்துடன், இரண்டு நபர்களையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர். (ற-110)

# கசிப்பு உற்பத்தி: இருவர் கைது!

புதுக்குடியிருப்பு, செப்.7

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டார காட்டுப் பகுதியில் பதுங்குகுழி போன்று நிலத்தைத் தோண்டி அதில் சட்டவிரோதமான முறையில் நீண்ட காலமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் மக்களால் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஐ.பி பண்டார தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் மாலை காட்டிற்குள் சென்று சுற்றிவளைப்பு தேடுதலை மேற்கொண்டனர். இதன்போது 30 லீற்றர் கசிப்பு, 180 லீற்றர் கோடா, கசிப்பு காய்ச்சப் பயன்படும் மூன்று பரல்கள் மற்றும் பல பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (வ-19)





113 குடும்பங்களுக்கு

# வீடமைப்பு முதலாம் தவணை கொடுப்பனவு நேற்று வழங்கல்

யாழ்ப்பாணம், செப்.7

அனைவருக்கும் வீடு என்ற செயற்றிட்டத்திற்கு கீழ் யாழ்ப்பாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்புக்கான உதவிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 113 குடும்பங்களுக்கு, 0.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீடுளை நிர்மாணிப்பதற்கான முதலாம் தவணை கொடுப்பனவு பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதற்கான நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றது.

இதன்போது, 113 குடும்பங்களுக்குமான முதலாம் தவணை கொடுப்பனவுகளை நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும், யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் வழங்கினார். இந் நிகழ்வில் யாழ் அரச அதிபரும் யாழ் ஒருங்கிணைப்பு சபையின் செயலாளருமான கணபதிபிள்ளை மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.எஸ்.நிக்கொலஸ்பிள்ளை, வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள், அரச அலுவலர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர். (வ-20)

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான மாதிரி வினாப்பத்திரம்

இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.

- சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.
- விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

## உதயன் பயிற்சிப் பரீட்சை – 5

### பகுதி- II

திருமதி எஸ்.செல்வநாயகி
ஆசிரியர்

நேரம்: 1 மணித்தியாலம் பெயர்: ............................ . பாடசாலை: ..............................................

01. தரப்பட்டுள்ள பந்தியை வாசித்து கீழே வினவப்பட்டுள்ள வினாக்களுக்குரிய பொருத்தமான விடைகளை எழுதுக.

பழங்களில் பல வகை உண்டு. மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் எமது நாட்டில் புகழ்பெற்றவை. அன்னாசி, தோடம்பழம், எலுமிச்சை, மாதுளை, விளாம்பழம் முதலிய பழங்களும் உள்ளன. பொதுவாகப் பழங்கள் எல்லாம் கீரைகளின் குணம் உடையன. கீரைகள் இரத்தத்தைத் தூய்மையாக வைப்பது போலப் பழங்களும் இரத்தத்தைத் தூய்மை செய்கின்றன.

1. முக்கனிகளுள் அடங்குபவை எவை?

..........................................................................................

2. கனிகள் என்பதன் ஒத்த சொல்லை எழுதுக?

..........................................................................................

3. காட்டில் என்பதன் எதிர்ப்பதத்தை எழுதுக.

..........................................................................................

4. புளிப்புச் சுவையுடைய பழங்கள் இரண்டு தருக.

..........................................................................................

5. இரத்தத்தைத் தூய்மைப்படுத்துபவை எவை?

..........................................................................................

6. பழங்களின் குணத்தை ஒத்த குணம் உடைய உணவு வகை எது?

02. பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக

1. களி : ..........................................................................

2. கழி: ..........................................................................

03. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடையாளம் இடுக.

1. "குப்பைகூளம்" என்பது அடுக்குமொழியாகும் ( )

2. "குதிரை கனைக்கும்" என்பது போல வண்டு உறுமும் ( )

3. நாம் என்பது தன்மை ஒருமைப் பெயர்ச் சொல்லாகும். ( )

04. பின்வரும் வாக்கியத்தைப் பன்மை வாக்கியமாக மாற்றி எழுது

பறவை அழகான கூடு கட்டியது

..........................................................................................

05. முன்பு + நூறு என்பதனைச் சேர்த்து எழுதுக.

..........................................................................................

06. புண்ணியவதி எனும் சொல்லின் எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

..........................................................................................

07. அதிபர் மாணவர்களைப் பாராட்டினார் எனும் வாக்கியத்தின்

1. எழுவாய்: ............................... 2.பயனிலை:.........................

3. செயற்படுபொருள்: ...............................................

08. பின்வருவனவற்றுள் சரியாக எழுதப்பட்ட சொற்களின் கீழ்க் கோடிடுக.

1. சவுக்காரம்/ சவக்காரம்/ சவர்க்காரம்

2. பிண்ணாக்கு/ புண்ணாக்கு/ பின்னாக்கு.

09. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் எழுதுக.

பறந்து வந்து / மூக்கில்/ நுளம்பு/ சிங்கத்தின்/ ஒரு/ கடித்தத்தில்

..........................................................................................

10. பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளிகளை நிரப்பி எழுதுக.

........................... தம்மைத் தேடியே

வண்டு ........................... நிச்சயம்

அழகு........................... கூட்டினை

........................... நல்ல தேனையே

அடைய வேண்டின் ...........................

ஆயிரம் உயிர் நிச்சயம்

11. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் எழுதுக.

1. தம்பிகள்/ வேண்டும்/ என்றால்/ அண்ணன்/ ஒற்றுமையாக/ இருக்க

2. வந்தது/ ஒன்று/ வாழ்ந்து/ வெள்ளாடு/ காட்டில்/ ஒரு

12. இடைவெளிகளை நிரப்புக.

காகம் ........................... வந்தது

காயின் மீது ...........................

........................... கொத்திப் பார்த்தது

சிறகடித்துப் ...........................

13. படங்கள் குறிப்பவற்றின் ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.



1. ...........................



2. ...........................

பின்வருவனவற்றை ஒழுங்குபடுத்தி எழுதுக.

1. see/ can / you/ picture / this/ in

..........................................................................................

14. பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1. வாருங்கள் நாங்கள் விளையாடுவோம் ...........................

2. எனக்கு வாழைப்பழம் தாருங்கள் ...........................

15. படங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சிங்களச் சொல்லை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.

1.  ...........................

2.  ...........................

16. 59584 என்பதனை எழுத்துக்களில் எழுதுக.

..........................................................................................

17. 49765, 94659, 76484, 93569 ஆகிய எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

..........................................................................................

18. 14 எனும் எண்ணுக்கு முன், பின்வரும் உரோமன் எண்களை எழுதுக.

முன் ........................... பின்...........................

19. 49267 எனும் எண்ணில் 9 என்ற எண்ணின் இடப்பெறுமானம் யாது?

..........................................................................................

20. பழத்தோட்டம் ஒன்றிலிருந்து 4608 தோடம்பழங்களும் 1419 அன்னாசிப்பழங்களும் 2052 றம்புட்டான் பழங்களும் பறிக்கப்பட்டன. பழத்தோட்டத்திலிருந்து பறிக்கப்பட்ட பழங்கள் எத்தனை?

..........................................................................................


21. வெற்றிடத்தில் வரவேண்டிய எண்களை எழுதுக.

19, 27, 35, 43 ..........., ..........................., ...........................

22. புகையிரத நிலையமொன்றில் புதன்கிழமையன்று 5709 பேர் பிரவேசித்தனர். அத்தினத்தில் 3714 பேர் வெளியேறினர். பிரவேசித்தோர் எண்ணிக்கை வெளியேறியோர் எண்ணிக்கையை விட எவ்வளவு கூடுதலானது?

..........................................................................................

23. உருவை அவதானித்து சமச்சீர்க் கோடுகளை வரைக.




24. கீழே தரப்பட்டுள்ள எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

XI, IX, VIII, IV, VI ..............................................................

25. புத்தகம் ஒன்றின் விலை ரூபா 32.00. என்னிடம் உள்ள பணம் ரூபா 100.00 எனின் நான் நான்கு புத்தகங்களை வாங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணம் தேவை?

..............................................................

26.  உருவை அவதானித்து அரைப்பங்குக்கு நிறந்தீட்டுக.

27. மு.ப. 3.15 மணி என்னும் நேரத்தை நியமநேரமாக எழுதுக. ..................

28. கொள்கலன் ஒன்றில் 6 லீற்றர் 500 மில்லிலீற்றர் தேங்காய் எண்ணெய் உள்ளது. இவ் எண்ணெயை 250 மில்லிலீற்றர் அளவுள்ள எத்தனை சிறிய போத்தல்களில் நிரப்ப முடியும்?

..............................................

29. விற்பனை நிலையமொன்றில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த விலைப் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. விலைப்பட்டியலை அவதானித்து அருகிலுள்ள சிட்டையை பூரணப்படுத்துக.

| விலைப்பட்டியல் | |
|---|---|
| | ரூபா சதம் |
| 1Kg கடலை | 90.00 |
| 4 முட்டைகள் | 32.00 |
| 6 பென்சில்கள் | 54.00 |

| பொருட்கள் | கொள்வனவு செய்யப்பட்ட அளவு | தொகை | |
|---|---|---|---|
| | | ரூபா | சதம் |
| கடலை | 1kg 750g | .......... | ......... |
| முட்டைகள் | 10 | .......... | ......... |
| பென்சில் | .................. | 126 | 00 |
| மொத்தம் | | ....... | ......... |

**இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவுக்கும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30. நீரிலும் நிலத்திலும் வாழும் பிராணி அல்லாதது.

1. தவளை 2. இறால் 3. முதலை

31. அனைத்தும் உண்ணிப் பிராணியாக அமைவது

1. முயல் 2. அணில் 3. பூனை

32. பின்வனவற்றுள் பறக்கும் முலையூட்டிப் பிராணி

1. ஆந்தை 2. வெளவால் 3. கழுகு.

33.  இந்தப் படத்தில் காட்டப்பட்டிருக்கும் தேசிய வீரர்

1. ஆதர் சி. கிளாக் 2. கலாநிதி ரீ.பீ. ஜாயா
3. கலாநிதி ஆனந்தக்குமார சுவாமி

34. இலங்கைக்கு முதலாவது ஒலிம்பிக் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தவர் யார்?

1. டங்கன்வைற் 2. சுசந்திகா ஜெயசிங்க 3. முத்தையா முரளிதரன்

35. இலங்கையின் தேசிய விளையாட்டு எது?

1. காற்பந்து 2. கரப்பந்து 3. கிரிக்கெட்

36. சோயா அவரையில் அதிகளவில் உள்ள போசணைப்பொருள்

1. புரதம் 2. மாப்பொருள் 3. கொழுப்பு

37. நீரின் உறை நிலை எவ்வாறு அழைக்கப்படும்

1. நீராவி 2. பனிக்கட்டி 3. திரவநிலை

38. சூரிய ஒளியிலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய உயிர்ச்சத்து

1. விற்றமின் A 2. விற்றமின் C 3. விற்றமின் D

39. மரங்களில் கூடுகளை அமைக்காத பிராணி

1. கிளி 2. காகம் 3. குயில்

40. உழவுத் தொழிலில் பயன்படும் 'ஏர்' எனும் கருவி

1. மண்வெட்டி 2. கலப்பை 3. வைக்கோல்.

41. ஊனுண்ணித் தாவரம்

1. நெப்பந்தீஸ் 2. துளசி 3. தூதுவளை

42. பின்வருவனவற்றில் வீட்டுச்சூழலில் நடமாடும் பிராணி

1. கபரகொயன் 2. செம்மறியாடு 3. பசு.

43. இலங்கையின் தேசிய கீதம் .............................. இயற்றப்பட்டது.

1. ஆனந்தசமரக்கோனால் 2.அழ.வள்ளியப்பனால் 3. மு.நல்லதம்பியால்

44. பின்வருவனவற்றுள் ஒட்டுண்ணித் தாவரம்

1.ஆமணக்கு 2. குருவிச்சை 3. மாமரம்

45. விற்றமின் A குறைபாட்டினால் ஏற்படும் நோய்

1. காசநோய் 2. மாலைக்கண் 3. என்புருக்கி

46. பாதுகாப்புக்காக ஓட்டினுள் ஒளிந்து கொள்ளும் பிராணிகள்

1. பல்லி, எலி 2. ஆமை, நத்தை 3. ஆமை, தவளை

47. தனி இதழைக் கொண்ட பூவாக அமைவது


1. பவளமல்லிகை 2. செவ்வந்தி 3. அந்தூரியம்

48. பின்வரும் தையல் வகைகளுள் அலங்காரத் தையல் அல்லாதது

1. நரம்புத் தையல் 2. கம்பளித் தையல் 3. பெருநூலோடல்

49. பின்வருவனவற்றுள் தோற்கருவி அல்லாதது

1. மேளம் 2. நாதஸ்வரம் 3. மிருதங்கம்

50.  படத்தில் குறிக்கப்படும் உபகரணம்

1. காற்றுத் திசை காட்டி 2. அளவுச்சாடி
3. மழைமானி

51. வேலைக்காரன் கம்பு பயன்படுத்தப்படும் வேலையாக அமைவது

1. வயல் வேலை 2. மேசன் வேலை 3. மின்சார வேலை

52. இலங்கையின் தலதாமாளிகை அமைந்துள்ள மாவட்டம்

1. நுவரெலியா 2. கண்டி 3. கொழும்பு

53.  உருவில் காட்டப்பட்டிருக்கும் உடுத்தொகுதி

1. பெருங்கரடி 2. சிம்மம் 3. பெருநாய்

54. கோள்கள் தன்னைத் தானே சுற்றுதல்

1. சுழற்சி 2. சுற்றுகை 3. அசைவு

55. பின்வரும் தாவரங்களில் ஆணிவேர்த் தாவரம் அல்லாதவை

1. தோடை, கொய்யா 2. பனை, தென்னை 3. அரசு, வேம்பு

56. நீரினால் பரம்பலடையும் வித்துக்கள் கொண்ட தொகுதி

1. பலா, நாயுருவி, இறப்பர் 2. தேங்காய், மருதை, பாக்கு
3. புலிநகம், மரமுந்திரி, துத்திரி

57. இலங்கையின் இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்

1. கொழும்பு 2. காங்கேசன்துறை 3. திருகோணமலை

58. அத்தாங்கு, கரப்பு, தூண்டில் என்பன பயன்படுத்தப்படும் தொழில்

1. உழவுத் தொழில் 2. மீன்பிடித் தொழில் 3. கட்டடத் தொழில்

59. பண்டை தகவல் தொடர்பாடல் முறையாக அமைவது

1. மின்னஞ்சல் 2. தொலைநகல் 3. பறையடித்தல்

60. பயனுள்ள பொழுதுபோக்கு வீட்டுத்தோட்டம் அமைத்தல் ஆகும். வீட்டுத் தோட்டம் அமைத்தலின் நன்மைகள் தொடர்பாக உங்கள் கருத்துக்களை 3 வாக்கியங்களில் எழுதுக.

(ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது 5 சொற்களுக்குக் குறையாது இடம்பெறுதல் வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக் கூட்டலும் சரியாக அமைந்திருத்தல் வேண்டும்)

1.......................................................................................
2.......................................................................................
3.......................................................................................

புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தயாராகும் மாணவச் செல்வங்களே வாராந்தம் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள் வெளியாகும். அவற்றுக்கான விடைகளை எழுதி கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றியாளர் பெயர் புள்ளிகளுடன் பிரசுரிக்கப்படும்.

**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# கிழக்கில் மொட்டு மலர பஸில் வியூகம் அமைப்பு

## கூட்டமைப்பு மு.கா.வை கூறு போடவும் வாய்ப்பு

மட்டக்களப்பு, செப்.7

**மாகாணசபைத் தேர்தலில் கிழக்கு மாகாணத்தையும் கைப்பற்றப்போவதாகச் சபதமெடுத்துள்ள பஸில் ராஜபக்ஷ அதற்கான வியூகங்களைத் தற்போதிருந்தே வகுக்க ஆரம்பித்துள்ளார்.**

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை உருவாக்கி குறுகிய காலப் பகுதிக்குள் மூன்று தேர்தல்களிலும் 'ஹெட்ரிக்' சாதனை புரிந்த பஸிலிடமே மாகாண சபைத் தேர்தலையும் வழிநடத்தும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய 7 மாகாண சபைகளையும் இலகுவில் வென்று விடலாம் எனக் கணக்கு போட்டுள்ள பஸில் ராஜபக்ஷ, எப்படியாவது கிழக்கிலும் மொட்டு மலரவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்காக மக்கள் மத்தியில் ஆதரவு பெற்ற தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளை அவர் குறிவைத்துள்ளார். சிலவேளை முஸ்லிம் காங்கிரஸ் உட்பட கிழக்கிலுள்ள சில கட்சிகளின் முக்கிய புள்ளிகளை அவர் வளைத்துபோடக்கூடும் என நம்பப்படுகின்றது. மத்தியில் ஆட்சி அதிகாரம் ராஜபக்சக்கள் வசம் இருப்பதால் பஸில் விரித்த வலையில் அவர்கள் இலகுவில் சிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மறுபுறத்தில் கருணா, பிள்ளையான் அணிகள் தனித்துக் களமிறங்கினால் கூட மாகாணத்தில் ஆட்சியமைப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் சங்கமிக்கக்கூடும்.

அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸும் ராஜபக்ஷ அணியுடனேயே அரசியல் பயணம் செய்கின்றது. கிழக்கில் கூட்டமைப்பும், முஸ்லிம் காங்கிரஸும் சங்கமித்தால் ஆட்சியமைப்பதில் நெருக்கடி ஏற்படலாம் என்பதால் இரு அணிகளையும் கூறுபோடும் தந்திரோபாய அரசியல் நகர்வுகளும் இடம்பெற்று வருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப)

## ஐ.தே.க. – ஐ.ம.ச. இணைக்கும் பேச்சு இடைநிறுத்தம்

கொழும்பு, செப்.7

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியை இணைப்பது தொடர்பாக நடத்தப்பட்ட பேச்சு இடைநிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இரண்டுகட்சிகளின் அணிகளிடையே ஏற்பட்ட எதிர்ப்புக் காரணமாகப் பேச்சுக்கள் நிறுத்தப்பட்டுள்ளன என்று சிங்கள ஊடகமொன்று குறிப்பிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இந்தப் பேச்சில் கலந்து கொண்டிருந்தார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் கரு ஜயசூரிய ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார். எனினும் ஐக்கிய தேசியக் கட்சி சஜித் பிரேமதாசவுக்கு எதிராக முன்வைத்த எதிர்ப்புக் காரணமாக பேச்சுக்கள் நிறுத்தப்பட்டு ள்ளன என்று அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ப)

## சுவிஸ்குமாரை விடுவிக்க நேரடியாகத் தலையீடு

### ஆணைக்குழு விசாரணைக்கு அழைக்கப்பட்டார் விஜயகலா

கொழும்பு, செப்.7

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனை அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்ப ட்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் 2015ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிட்ட குமரன் சர்வானந்தாவையும் ஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகு மாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

முன்னதாக சுன்னாகம் பொலிஸில் இணைக்கப்பட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஞானலிங்கம் மயூரன் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த இருவரையும் வரவழைக்க ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. நேற்று முனதினம் காலை ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியம் அளித்த ஞானலிங்கம் மயூரன்,

புங்குடுத்தீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கொலைசெய்யப்பட்ட சம்பவத்தின் முக்கிய சந்தேகநபரான மகாலிங்கம் சசிகுமார் அல்லது சுவிஸ் குமாரை விடுவிப்பதில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேரடியாகத் தலையிட்டார் எனக் கூறியிருந்தார். இதன் அடிப்படையிலேயே, இருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுளது.

(ப-இ)

## அணில் காட்டுவதாக அழைத்து 12 வயது சிறுமி துஷ்பிரயோகம்

### கம்பி எண்ணுகிறார் இராணுவச் சிப்பாய்

கொழும்பு, செப்.7

வீட்டில் வளர்க்கும் அணில் ஒன்றைக் காண்பிப்பதாகக் கூறி, 12 வயதான சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் முல்லைத்தீவு இராணுவ முகாமில் கடமையாற்றும், இராணுவச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டு பம்பலப்பிட்டிய நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது

விடுமுறையில் வீட்டுக்கு வந்திருந்த இந்த இராணுவச் சிப்பாயை மீட்டியாகொட பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்து விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தினர். முல்லைத்தீவு இராணுவ முகாமில் கடமையாற்றும் பெரலிய தெல்வத்தை மிதிகஸ்துடுவ பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான இராணுவச் சிப்பாயே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

தெல்வத்தை தியபோட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 12 வயதான பாடசாலை மாணவி தனது வீட்டுக்கு அருகில் இருக்கும் கடையில் கற்றலுக்குத் தேவையான காகிதங்களை வாங்கிக்கொண்டு வீட்டுக்குச் சென்றபோது, சந்தேக நபர், அணிலைக் காட்டுவதாக அழைத்துச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. (ப)

## உள்ளூர் பட்டங்களை வழங்க மட்டக்களப்பு பல்கலையின் விண்ணப்பங்கள் நிராகரிப்பு

கொழும்பு, செப்.7

உள்ளூர் பட்டங்களை வழங்குவதற்காக மட்டக்களப்புப் பல்கலைக்கழகம் சமர்ப்பித்த விண்ணப்பம், ஏப்ரல் 5, 2019ஆம் ஆண்டு உயர் கல்வி அமைச்சகத்தால் நிராகரிக்கப்பட்டது என்று ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

பல்கலையை நிர்வகிக்கக்கூடிய சுயாதீன நிதிக் கட்டமைப்பை நிரூபிக்க நிறுவனத்தின் அதிகாரிகள் தவறியமையால் இந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது என்று உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன் உயர் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் கமல் ரோஹிதா உடுவாவல சாட்சியமளித்துள்ளார்.

உள்ளூர்ப் பட்டங்களுக்கான விண்ணப்பத்தில், பல்கலைக்குப் பெறப்பட்ட வெளிநாட்டு நிதி தொடர்பான விவரங்களை வழங்கவில்லை. பல்கலைக்கழக வளாகத்தின் அதிகாரிகள் நிதி உதவிகளை இலகுக் கடன்களாகப் பெற்றிருந்தனர் என்று அவர் மேலும் தனது சாட்சியத்தைப் பதிவு செய்தார்.

(ப-இ)

## ஆயுர்வேத நிலையத்தில் விபச்சார விடுதி

### நான்கு பெண்கள் கைது

கொழும்பு, செப்.7

கொழும்பு, ராஜகிரியவில் ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற பெயரில் நடத்தப்பட்ட விபச்சார விடுதி ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு அங்கிருந்த பெண்கள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று நுகேகொட விசேட குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஆயுர்வேத மசாஜ் நிலையம், இணையத்தளம் மற்றும் வார இறுதிப் பத்திரிகைகளில் தமது விளம்பரங்களை வெளியிட்டு பகிரங்கப்படுத்தியது. அங்கு வரும் நபர்களுக்கு மிகவும் நுட்பமான முறையில் பெண்களை விற்பனை செய்வதாக மேல் மாகாணப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ப)

## கண்காணிப்புக்குள் எண்ணெய்க் கப்பல்

அம்பாறை, செப்.7

கிழக்குக் கடற்பரப்பில் தீப்பற்றிய எம்.டி நியுவ் டயமன்ட் கப்பல் கடற்பரப்பின் 40 மைல் தூரத்திற்கொண்டு செல்லப்பட்டதன் பின்னர் அதனை கண்காணிப்பதற்காக 11 படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

இந்த பணியில் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படைக்குச் சொந்தமான அமெயா என்ற கப்பலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

எம்.டி நியுவ் டயமன்ட் கப்பலில் பரவிய தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளபோதும் அதில் உள்ள எண்ணெய் கடலில் கலப்பதற்கான காரணிகள் உள்ளனவா என்பது குறித்து அதிகம் கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் இந்திய கடலோரப் பாதுகாப்புப் படை அதன் உத்தியோக பூர்வ டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளது. (ப)

# மருத்துவரை நியமிக்கக் கோரி சுழற்சி முறையில் போராட்டம்

## முல்லையில் நேற்று ஆரம்பம்

**முல்லைத்தீவு, செப்.7**
**முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் காணப்படும் மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக்கோரி சுழற்சி முறையிலான போராட்டம் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் நீண்ட காலமாக நிலவும் மருத்துவர் பற்றாக்குறையால், அங்கு வரும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். உரிய சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளவதற்காக நீண்ட நேரம் காத்திருக்கின்றனர். எனவே மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு, மருத்துவர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யக் கோரி வைத்தியசாலை அபிவிருத்திக் குழு மற்றும் சமூக அமைப்புகள் வைத்தியசாலை நலன்விரும்பிகள் என அனைவரும் கவனவீர்ப்பு போராட்டம், பணிப் புறக்கணிப்பு போராட்டம் என்பவற்றை முன்னெடுத்து வந்த நிலையிலும்



மருத்துவர்கள் நியமிக்கப்படாததால், நேற்று முதல் சுழற்சி முறையான போராட்டத்தை அவர்கள் ஆரம்பித்துள்ளனர். வைத்தியசாலை முன்பாக இப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ப-9)

## மீனவர்கள் அறுவர் இந்தியாவில் கைது



கொழும்பு, செப்.7
இந்திய கடற்படைக்குச் சொந்தமான பகுதியில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கை மீனவர்கள் 6 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த 28 ஆம் திகதி மீன்பிடி நடவடிக்கைகளுக்காகச் சென்றபோதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. கைதான இலங்கை மீனவர்களை மீட்கும் விடயம் தொடர்பில் இலங்கை மீனவர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-இ)

## அதிவேக நெடுஞ்சாலை விரைவில் அமையும்

உள்ளூர் வங்கிகளின் நிதிகளையும், உள்ளூர் கட்டுமான நிறுவனங்களின் சேவைகளையும் பயன்படுத்தி ருவன்புர அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.
இந்தத் திட்டத்தை விரைவில் தொடங்குவதற்கான வழிமுறைகள் வழங்கப்பட்டுள்ளன என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.
73.9 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த அதிவேக நெடுஞ்சாலை, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் கஹாதுடுவா வெளியேறும் இடத்திலிருந்து தொடங்கி பெல்மதுல்லவுடன் முடிவடையும்.
ருவான்புர அதிவேக நெடுஞ்சாலை மூன்று கட்டங்களை கொண்டமைந்துள்ளதுடன், அதன் நிர்மாணப் பணிகள் மூன்று ஆண்டுக்குள் நிறைவடையும் என்றும் நெடுஞ்சாலை அமைச்சகம் தெரிவித்துள்ளது (ப-இ)

## கலந்துரையாடல்

கரணவாய், செப்.7
கெருடாவில் கிழக்கு பகுதியில் கால போகச் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான கலந்துரையாடல் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கொம்மந்தறை சனசமூக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.
இதில் முக்கிய விடயங்கள் பல கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து விவசாயிகளையும் தவறாது கலந்துகொள்ளுமாறும் அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு கெருடாவில் கிழக்கு கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளதெனவும் கமக்கார அமைப்பின் செயலாளர் ந.வசீகரன் அறிவித்துள்ளார். (ப-108)

# மஹாவலி பிரதேசங்களில் நில அதிர்வு ஏற்பட வாய்ப்பு

## புவியியல் பேராசிரியர் திஸாநாயக்க எச்சரிக்கை

எதிர்வரும் நாள்களில் மஹாவலி நீர்த்தேகத்துக்கு அருகில் உள்ள பிரதேசங்களில் சிறிய நில அதிர்வுகள் ஏற்படக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
நீர்த்தேக்கத்தின் நீர் அழுத்தம் காரணமாக அல்லது நீர்த்தேக்கத்துக்கு அருகில் சுண்ணாம்புக்கல் உடைக்கும் போது ஏற்படும் அழுத்தம் காரணமாக இவ்வாறான அதிர்வுகள் ஏற்படக் கூடும் என, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் புவியியல் பிரிவின் பேராசிரியர் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
கடந்த மாதம் 29 மற்றும் இம்மாதம் இரண்டாம் திகதிகளில் விக்டோரியா நீர்த்தேக்கத்திற்கு அருகில் உள்ள பிரதேசங்களில் இரண்டு ரிச்டர் அளவில் நில அதிர்வு ஏற்பட்டிருந்தது. இந்த நில அதிர்வு விக்டோரியா நீர்த்தேக்கத்துக்கு அருகில் உள்ள பிரதேசங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டன. நீர்த்தேக்கங்களுக்கு அருகிலுள்ள பாறைகளில் பெரும்பாலானவை டோலமைட் சுண்ணாம்பு, சிதைந்த காா்பனேட் பாறைகள். இந்தப் பாறைகளின் அழுத்தம் குறைந்ததே கடந்த இரண்டு நாள்களாக நில அதிர்வு ஏற்படக் காரணம். இந்த நிலைமையை இலகுவாக எடுத்துக் கொள்ளக் கூடாது. இவ்வாறான நில அதிர்வுகள் எதிர்வரும் நாள்களிலும் ஏற்படக் கூடும் என்றார். (ப)

## பரீட்சை வழிகாட்டி நூ[...] பகிர்ந்தளிக்கும் திட்ட[...]

முல்லைத்தீவு,செப்.7
செயல் அமைப்பின் ஏற்பாட்டில் க.பொ[...] சாதாரணதர வினாவிடைப் பரீட்சை [...]காட்டி நூல் பகிர்ந்தளிக்கும் திட்டம் முத[...]டமாக முல்லைத்தீவில் ஆரம்பிக்க[...]டவுள்ளது.
இந்தத் திட்டம் முற்றுமுழுதாக பொதும[...]ளின் நன்கொடையில் நிறைவேறுவத[...] மக்களால் மாணவர்களுக்கு எ[...] தொனிப்பொருளில் பொதுமக்களாலே[...] இந்த நூல்கள் உரிய தரப்பிடம் கைய[...]கப்படவுள்ளன.
போரின் கோரப்பிடியில் சிக்குண்டு க[...]யில் மீள எழ முயன்று கொண்டிருக்[...] முல்லைத்தீவுக்கு. பொதுமக்கள் சே[...] கைகொடுக்கும் அடையாளமாக இந்தத்[...]டம் முல்லைத்தீவில் நாளை மறுதினம் புத[...] கிழமை ஆரம்பிக்கப்படும்.
முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த மு[...] க.பொ.த சாதாரண தரம் எழுதும் அத்த[...] மாணவர்களுக்கும் கணித, விஞ்ஞ[...] பரீட்சை வழிகாட்டி நூல் இலவசமாக வ[...]கப்படும்.
அடுத்த கட்டமாக கிளிநொச்சி, மட்டக்க[...] அம்பாறை, வவுனியா, மன்னார் மாவ[...]களில் விரைவில் இந்தத் திட்டம் முன்[...]டுக்கப்படும் என்று அமைப்பினர் தெரி[...]னர்.

## 7,403 பேர் தொடர்ந்தும் தனிமையில்

கொழும்பு, செப்.7
இலங்கையில் தற்போது 7ஆயிரத்து 403 பேர் கொரோனா தனிமைப்படுத்தலில் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
70 தனிமைப்படுத்தல் நிலையங்களிலேயே அவர்கள் தனிமைப்படுத்தலில் வைக்கப்பட்டுள்ளனர்.
அதேவேளை 37 ஆயிரத்து 522 பேர் தனிமைப்படுத்தல் செயற்பாடுகளை நிறைவு செய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.
2 லட்சத்து 37ஆயிரத்து 610பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பொதுமக்கள் தொடர்ந்தும் கொரோனா தடுப்பு முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று இராணுவத்தளபதி சவேந்திர சில்வா கோரிக்கை விடுத்துள்ளார். (ப-இ)

## வலி.தென்மேற்கில் அபிவிருத்திசபை

மானிப்பாய்,செப்.7
சுகாதாரம், கல்வி மற்றும் சமூக மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் நோக்கில் வலி. தென்மேற்கு பிரதேச சமூக அபிவிருத்திசபை உருவாக்கப்பட்டுள்ளது.
கல்வியியலாளர்கள், சமூகப்பணியாளர்கள், அரச அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது அமைப்பின் பிரதிநிதிகளைக் கொண்ட பரந்த அமைப்பாக வலி. தென்மேற்கு அபிவிருத்திச்சபை உருவாக்கப்பட்டுள்ளது.
வலி. தென் மேற்கில் உள்ள 28 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்திச் சபை அமைக்கப்பட்டுள்ளது.
கடந்த முதலாம் திகதியில் இருந்து நிர்வாகப்பணிகளை உத்தியோக பூர்வமாக சபை ஆரம்பித்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-50)

## தேசியப் பட்டியல் ஆசனம் ரணிலுக்கு?

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் உறுப்பினர் வெற்றிடத்திற்கு கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.
கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.
நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வரலாறு காணாத பின்னடைவைச் சந்தித்தது. வாக்களிப்பு மூலம் ஒரு உறுப்பினர் கூடத் தெரிவாகவில்லை. இருப்பினும் தேசியப்பட்டியல் ஊடாக ஓர் ஆசனம் கிடைக்கப்பெற்றது. அந்த ஆசனத்தை யாருக்கு வழங்குவது என்பது தொடர்பில் கட்சிக்குள் குழப்பம் நீடித்து வந்த நிலையிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-இ)

# பிரதமரின் அதிகாரங்களை பறிக்க ஜனாதிபதி முயற்சி

*சாடுகிறார் சமிந்த விஜேசிறி எம்.பி.*


கொழும்பு, செப்.7
பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு தற்போது இருக்கும் அதிகாரங்களை 20ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தன்வசப்படுத்தும் நிலைமையில், "தற்போது மகிழ்ச்சியா" என மஹிந்தவிடம் கேள்வி எழுப்புவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக நாடாளுமன்றத்திற்குச் செல்ல முன்னர் அமெரிக்காவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி, அமெரிக்க குடியுரிமையை இரத்துச் செய்ததைக் காட்டிவிட்டு, எந்தக் காரணத்திற்காகவும் நாட்டை விட்டுச் செல்லப் போவதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது சமிந்த விஜேசிறி குறிப்பிட்டார். (ப-இ)

# அபிவிருத்திக் கோஷமிட்டோரை இனிமேல் தூங்கவே விடக்கூடாது

*சாணக்கியன் எம்.பி தெரிவிப்பு*



**கொழும்பு, செப்.7**
**அபிவிருத்தி என்று கோஷமிட்டு மக்களின் வாக்குகளைப் பெற்றவர்களைத் தூங்கவிடக் கூடாது என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.**

மட்டக்களப்பு போரதீவுப்பற்றில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
தற்போதுள்ள அரசாங்கமானது அசூர பலத்துடன் உள்ளது. அவர்கள் நினைத்ததைச் செய்வதற்காகத்தான் 20ஆவது அரசியல் சீர்திருத்த சட்ட மூலமொன்றை உருவாக்கியுள்ளனர்.

ஆகவே, இனி நாம் அபிவிருத்தி என்று கோஷமிட்டு மக்களின் வாக்குகளைப் பெற்றவர்களைத் தூங்கவிடக் கூடாது. அவர்களிடம் சென்று எமக்குத் தேவையானதைக் கூறி அவற்றை பெற்று வரும்படி அழுத்தம் கொடுக்க வேண்டும். என்னால் முடிந்த செயற்படுகளை எனது காலத்தினுள் நிச்சயம் செய்து தருவேன் என்றார். (ப-இ)

கஞ்சா செடிகள் மீட்பு;
## மூவர் கைது

கொழும்பு, செப்.7
கொஸ்லாந்தை பகுதியில் நடுகை செய்யப்பட்டிருந்த கஞ்சா செடிகள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலின் போதே இக்கஞ்சா செடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (ப-இ)

# தயாசிறியின் கருத்து உண்மைக்கு மாறானது

*முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆவேசம்*

அண்மையில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 69ஆவது ஆண்டு நிறைவு தினத்தில் கலந்துக்கொள்ளுமாறு எனக்கு அழைப்பு விடுத்தார் என கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜயசேகர ஊடகங்களிடம் தெரிவித்திருப்பது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி தனது முகநூல் பக்கத்தில் இட்டுள்ள பதிவில் மேலும் உள்ளதாவது;
கடந்த காலங்களில் நடந்த ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு நிறைவு மாநாடுகளுக்கு எனக்கு எவ்வித அழைப்பும் கிடைக்கவில்லை என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

கட்சியின் உறுப்பினர்களை ஏமாற்றும் நோக்கில் இவர்கள் புனையும் பொய்கள் குறித்து அறிவுடன் ஆராய்ந்து பார்ப்பது உண்மையான ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரின் கடமை.

கட்சியின் மாநாடுகளுக்கு மாத்திரமல்ல, மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கு பல வருடங்களாக எனக்கு அழைப்புகள் கிடைக்கவில்லை. அப்படி அழைப்புக் கிடைத்திருந்தால், ஏற்றுக்கொண்டிருப்பேன்- என்றுள்ளது. (ப-இ)

# கடலில் எண்ணெய்க் கசிவு: ஆய்வு செய்யுமாறு பணிப்பு

கல்முனை கடற்பிரதேசத்தில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கடற்றொழில அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் சங்கமன்கண்டி கடற்பரப்பில் இருந்து 38 கடல் மைல் தூரத்தில் பயணித்துக் கொண்டிருந்த எண்ணெய்க் கப்பலில் ஏற்பட்ட தீ விபத்து கட்டுப்படுத்தப்பட்ட நிலையில் கல்முனை கடற்பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான எண்ணெய் படிமங்கள் பிரதேச கடற்றொழிலாளர்களால் அவதானிக்கப்பட்டுள்ளது. அச்சமடைந்த கடற்றொழிலாளர்கள் தொழிலுக்கு செல்வதை நிறுத்தியிருந்தனர். விடயம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. நாரா எனப்படும் நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் நவரட்ணராஜா தலைமையிலான அதிகாரிகளுடன் நேற்றுமுன்தினம் அமைச்சர் கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்தார். கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சம் தொடர்பில் உடனடியாக ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு இதன்போது அறிவுறுத்தினார். (ப-இ)

# சட்டவிரோதமாக தண்ணீர் பெற்ற ஐந்து பேர் கைது



கொழும்பு, செப்.7
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குத் தெரியாமல் சட்டவிரோதமான முறையில் பல வருடங்களாகத் தண்ணீரைப் பெற்றுக்கொண்ட 05 பேர் கைது செய்யப்பட்டள்ளனர். தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான குழாயில் மக்களுக்கு விநியோகிக்கப்படும் தண்ணீரையே இவர்கள் சட்டவிரோதமாகப் பெற்றுக்கொண்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. தம்புள்ளைப் பகுதியில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ப)

# தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரம் நாடாளுமன்ற பேரவைக்கு?

*சந்திம வீரக்கொடி எம்.பி ஆலோசனை*

கொழும்பு, செப்.7
20ஆவது அசலமைப்புத் திருத்தச் சட்டவரைவில் முன்வைக்கப்பட்டுள்ளவாறு தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பதை ஜனாதிபதி மேற்கொள்வதை விட அந்த அதிகாரத்தை நாடாளுமன்றப் பேரவைக்கு வழங்குவது மிகவும் பொருத்தமானது என ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
தேர்தல் ஆணைக்குழுவை ஜனாதிபதி நியமிக்காது, அதனை நியமிக்கும் அதிகாரத்தை நாடாளுமன்றப் பேரவைக்கு வழங்கினால் மிகவும் செயற்பாட்டு ரீதியானதாக இருக்கும் என நான் நினைக்கின்றேன். நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் அரசமைப்புத் திருத்தச் சட்டம் விவாதத்திற்கு உட்படுத்தப்படும் போது தனிப்பட்ட நிலைப்பாடுகளை முன்வைக்க எதிர்பார்த்துள்ளோம் என்றார். (ப-இ)

*அமெரிக்கத் தூதுவராக*
# ரவிநாத் ஆரியசிங்க



கொழும்பு, செப்.7
அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக ரவிநாத் ஆரியசிங்க நியமிக்கப்படவுள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக கடமையாற்றிய ரொட்னி பெர்னாண்டோ இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்து வரும் பிரான்ஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் கஷ்னிகா ஹிரிம்புரேகம நியமிக்கப்படவுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான இவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இத்தாலி, தென் கொரியா, சீசெல்ஸ், ஈரான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கான தூதுவர் பதவிகள் வெற்றிடமாக இருந்து வருகின்றன.

அந்த பதவிகளுக்கு தகுதியானவர்கள் விரைவில் நியமிக்கப்பட உள்ளனர் என வெளிவிவகார அமைச்சின் செய லாளர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். (ந-இ)

# ஐ.தே.க.வை மீட்பதற்கு சஜித்தாலேயே முடியும்

*நளின் பண்டார எம்.பி நம்பிக்கை*



ஐக்கிய தேசியக் கட்சிக்கு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் லங்கா சமசமாஜக் கட்சிகளுக்கு ஏற்பட்ட நிலைமை ஏற்படாது இருக்க வேண்டுமாயின் கட்சியின் தலைமைத்துவத்தைப் பெற்றுக்கொள்ள சஜித் பிரேமதாசவுக்கு அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவிக்கு தற்போது பரிந்துரைக்கப்பட்டுள்ள எவருக்கும் மக்கள் மத்தியில் ஆதரவில்லை. இதனால், அவர்களால் கட்சியைப் பலப்படுத்த முடியாது. சஜித் பிரேமதாசவினால் மாத்திரமே ஐக்கிய தேசியக் கட்சியை வலுவானதாகப் பலப்படுத்த முடியும். அத்துடன் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடைத்துள்ள ஒரே தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குக் கூட எவரையும் இதுவரை தெரிவு செய்யாததன் மூலம் அவர்களின் தோல்வியின் தன்மையைக் காட்டுகிறது. இது மறைமுகமாக அரசாங்கத்துக்கு ஆதரவளிக்கும் நடவடிக்கையா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றார். (ப-இ)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது வித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றும்

**குமாரசாமி ரவீந்திரா**

B.Sc (Phy), Dip in Education (merit), D.S.M (merit), SLPS - I

அவர்கள் இலங்கை அதிபர் சேவை தரம் - 01 இற்கு பதவியுர்வு பெற்றதை போற்றுவதோடு. மேலும் பல உயர்பதவிகளைப் பெற்று சிறப்புடன் சேவையாற்ற மனதார வாழ்த்துகின்றோம்

Best Wishes — Best Wishes

ஆசிரியர் நலன்புரி சங்கம்

யா/ சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம்
மட்டுவில், சாவகச்சேரி.

# அவசர மின் கொள்வனவுக்கு ரூ.2,100 கோடி செலவிட முடிவு

## நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்புகள் சுட்டிக்காட்டு

கொழும்பு, செப். 7

அவசர மின்சாரக் கொள்வனவுக்கு 2 ஆயிரத்து100 கோடி ரூபா செலவிடப்படவுள்ளதாக நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் சில அமைப்புக்கள் நேற்றுத் தெரிவித்தன.

குறுகிய கால அடிப்படையில் ஹொங்கொங் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியங்களுக்கு சொந்தமான நிறுவனங்களு க்கு விலைமனு க்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டு வருவதாக அந்த அமைப்புகள் குறிப்பிடுகின்றன. ஒரு அலகு மின்சாரத்துக்காக சுமார் 31 ரூபாவை செலுத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. குறுகிய கால அடிப்படையில் ஹொங் மற்றும் டுபாய்க்கு சொந்தமான 2 நிறுவனங்களிடமிருந்து 128 மெகாவாட் மின்சாரத்தைக் கொள்வனவு செய்வதற்கான முயற்சி உள்ளது. மின்சார மாஃபியாவுக்கு பின்னால் மின் பொறியியலாளர்கள் உள்ளனர். மின்சக்தி அமைச்சின் அதிகாரிகள் உள்ளனர். சில தூதுவர்கள் உள்ளனர். மின்சக்தி அமைச்சர் கூறும் வகையில் இந்த மாஃபியாவுக்கு உதவும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். தற்போதைய இந்தக் கொள்வனவு காரணமாக நாட்டுக்கு 2 ஆயிரத்து100 கோடி ரூபா நட்டம் ஏற்படுகிறது. எந்த அரசு வந்தாலும் மின்சார மாஃபியா இடம்பெறுவதைக் காண முடிகிறது. மின்சார அதிகாரி அறியாமல் தவற விட்டதாக கூறினாலும் தற்போது திட்டமிட்டு அதனைச் செய்ததமை தெளிவாகின்றது. நுகர்வோரைப் பாதுகாக்கும் உரிமை பொதுபயன்பாட்டு ஆணைக்குழுவுக்கு உள்ளது. அதற்கான அதிகாரம் சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ளது. ஆகவே இதற்கான அனுமதியை வழங்க வேண்டாம். மின்சார சபைக்கு 2ஆயிரத்து100 ரூபா நட்டத்தை ஏற்படுத்தும் மின்சார மாஃபியாவை நிறுத்துவதற்கு உடன்நடவடிக்கை எடுங்கள் என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் வித்தானகே கூறினார்.

இந்த நடவடிக்கையுடன் தொடர்புடைய தனியார் நீர் மின் உற்பத்தி நிலையங்கள் உள்ளன. மின்சார தட்டுப்பாடு ஏற்படுத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் மின்சாரத்தை விநியோகிக்கின்ற வர்த்தகர்கள் உள்ளனர். அது மாத்திரமல்ல இந்த நடவடிக்கையை வழிநடத்துகின்ற மின்சார சபை அதிகாரிகள் யார். மின் பொறியியலாளர்கள் அங்கம் வகிக்கும் நிர்வாக சபையினராலேயே இந்த நடவடிக்கை வழிநடத்தப்படுகிறது. ஆகவே அமைச்சர் இந்தப் பிரச்சினையை நாடாளுமன்றுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தாதீர்கள் என்று மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் அநுருத்த சோமதுங்க தெரிவித்தார். (த-இ)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -15, அரசடி வீதி, 2 ஆம் ஒழுங்கை ஆதன இல. 24 என்ற இலக்கத்தினைக்கொண்ட ஆதனம் வேலன் பெண் சின்னக்குட்டி என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும் இ.சபேசன் முத்தாவில் நிறைவேற்றப்பட்ட 2539 ஆம் இலக்க 30.06.2010 ஆம் திகதியிடப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனம் 1971 ஆம் ஆண்டளவில் தனது பெற்றோர் சதாசிவம் தாமோதரம்பிள்ளையாலும் பெண் கனகம்மாவினாலும் தனக்கு சீதனமாகக்கொடுக்கப்பட்டதென்றும் நாட்டில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக இடம் பெயர்ந்து சென்ற பொழுது குறித்த உறுதி தொலைந்து விட்டதென்றும் காணிக்கந்தோரில் தேடுதல் செய்து மீளப் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்றும் கடந்த 39 ஆண்டுகளாக தனது சொந்தமும் நிந்தமும் தடையற்றதுமான ஆட்சியிலிருந்து வந்ததென்றும் சின்னத்துரை கைம்பெண் கமலம் குறித்த ஆதனம் தனக்கு உரித்தானது என்று வெளிப்படுத்தியுள்ளார்.

நல்லூர் அரசடி வீதி 3 ஆம் ஒழுங்கையைச் சேர்ந்த சின்னத்துரை கைம்பெண் கமலமும் அரசடி வீதி 2 ஆம் ஒழுங்கை சந்திரா மகாலிங்கம் கொண்டலடி வீதி யோகராணி சின்னத்துரை திருகோணமலை சாம்பல் வீதி 3 ஆம் வட்டாரம் தேவராசா பெண் தயாநிதி யாழ்ப்பாணம் அரசடி வீதி 2 ஆம் ஒழுங்கை தாமோதரம்பிள்ளை ரவிச்சந்திரன் ஆகியோர் சேர்ந்து யாழ்ப்பாணம் கொண்டலடி வீதி 47 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த சின்னத்துரை ராஜ்குமாரும் பெண் சுகந்தினிக்கும் பிரசித்த நொத்தாரிசு வி.துரைராஜா முகதாவில் வரையப்பட்ட 10215 இலக்க 13.05.2016ஆம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தினை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

**ஆதனடாப்பு:**

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாண பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை கிராம அலுவலர் பிரிவு J/109 யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் பிரதேச செயலகம் கோட்டைக்காடு அல்லது கற்றாளப்பலம் நிலப்பரப்பு 01 குளி 03.77 இது 2010.07.09ஆம் திகதி நில அளவையாளர் என். கேதீஸ்வரன் அளந்து வரைந்த 1270ம் இலக்கத்தில் வரைந்த படத்தில் துண்டு 1 என அடையாளமிடப்பட்டுள்ளது. இதற்கு எல்லை

| | | |
|---|---|---|
| கிழக்கு | :- | தயான் பெண் பரிமளாவுக்கும் யோகராஜா பெண் சூரியகலாவிற்கும் உரிய ஆதனங்கள். |
| வடக்கு | :- | வேலு சண்முகத்தின் ஆதனம் |
| மேற்கு | :- | அரசடி வீதி 2 ஆம் ஒழுங்கை |
| தெற்கு | :- | சிறீதரன் பெண் வினோதினியின் ஆதனம் இடதங்கலும் இதனுள் அமைந்த வீடும் மற்றும் அதற்குச் சேர்ந்தவையும் |

தற்போது சின்னத்துரை ராஜ்குமாரும் பெண் சுகந்தினியும் இவ்வாதனத்தை தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை ராஜ்குமாரும் பெண் சுகந்தினியும் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும். யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**இம்மனுவல் ஆனல்ட்**
**முதல்வர்**
**மாநகரசபை.**

# மரண அறிவித்தல்



## திருமதி சேனாதிராஜா சரோஜினிதேவி


உடுவிலைப் பிறப்பிடமாகவும் வட்டுத் தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சேனாதிராசா சரோஜினிதேவி நேற்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிமுத்து சின்னாம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற சேனாதிராசாவின் பாசமிகு மனைவியும். காலஞ்சென்ற சண்முகம் பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற மாணிக்கவாசகர், மாசிலாமணி, தங்கரத்தினம் மற்றும் விமலாதேவி, ஜஸ்வரிதேவி, பாலாம்பிகைதேவி, விஜயரத்தினம், குணரத்தினம், ஸ்ரீகாந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லெனின், பொம்மி, ஸ்ராலின், பற்றீசன், கொலஸ்ரீனா, நிலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், வசுந்திரா, ரஜீவன், வதனன், ஜேந்தன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், துரைசிங்கம், கேதீஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், நெலன் சேனையா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2020) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 1.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**T.P: 077 3411 569**

## மரண அறிவித்தல்



பிறப்பு 20 . 03 . 1935 இறப்பு 04 . 09 . 2020

### திருமதி மனோன்மணி சிவராமலிங்கம்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ். கைதடி, அனுராதபுரம், நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சிவராமலிங்கம் 04-09-2020 வெள்ளிக் கிழமை பிறிஸ்பேன் அவுஸ்திரேலியாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மழவராயர் சின்னத்தம்பி - ஞானம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி அப்பாப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிவராமலிங்கம் அவர்களின் ஆருயிர் மனைவியும், தயாளினி (இலங்கை), தயாரூபன் (நியூசிலாந்து), லதாளினி(கனடா), அருட்செல்வன்(கனடா), தயாபரன், பிரபாகரன் (அவுஸ்தி ரேலியா), சுதாகரன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கராஜா, நாகவதனி, சிவபாலன், கலைமகள், நிருபா, வனஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற போல் மார்க்கண்டன், கமலாம்பிகை, காலஞ்சென்ற பரமேஸ்வரி, யோகேஸ்வரி, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர்களான அஞ்செலா, சங்கரப்பிள்ளை, சண்முகநாதன், சிறீ, வரதராஜன் மற்றும் தர்மலோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சேதுலிங்கம், சிதம்பரநாதர், சின்னக்குட்டி, பறுவதம், நாகம்மா, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மிருதுஷா, பவிசாந்த், ஷோபிக்ஷனா, பிருந்துஜா, யனுக்ஷனா, துலக்ஷா, சயிந்திரா, அர்ஜூன், லக்ஷ்மி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகளும் தகனமும் (09.09.2020) புதன்கிழமை நண்பகல் 12.00 - 1.30 மணிக்குள் Mount Thompson Memorial Gardens and Crematorium 329 Nursery Rd, Holland Park QLD 4121, Australia வில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தயாளினி (மகள் - (077 695 2944)
பிரபாகரன் (மகன் - (0061 4846 28721)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



மண்ணில் 08 . 11 . 1990 விண்ணில் 03 . 09 . 2020

### ஹரிக்கிருஷ்ணா தனபாலசிங்கம் (கஜன்)
(Civil Engineer)

கிளிநொச்சி பளை கச்சார்வெளியைப் பிறப்பிடமாகவும், கனடா Whitchurch- Stouffville ஐ வதிவிடமாகவும் கொண்ட **ஹரிக்கிருஷ்ணா தனபாலசிங்கம் (கஜன்)** 03-09-2020 வியாழக்கிழமை கனடாவில் அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான **நல்லையா செல்வராணி** தம்பதிகள், **வீரகத்தி பூரணம்** தம் பதியரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற **தனபாலசிங்கம்** மற்றும் **மங்கையற்கரசி** தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், **ஜெயரூபன், சந்திரா** தம்பதிகளின் அருமை மருமகனும், **சபீதாவின்** ஆருயிர்க் கணவரும், **மலர்விழி** (மாலதி - பிரான்ஸ்), **ஜெயமாலினி** (மாலினி - பிரான்ஸ்), **ஜெயதீபன்** (தீபன்- கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், **சிறீஷ்கந்தராஜா** (சிறி - பிரான்ஸ்), **விஜயரூபன்** (விஜயன்- பிரான்ஸ்), **சதாலட்சுமி** (சதா - கனடா), **வினோத்** (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், **கஜீதன்** (பிரான்ஸ்), **ரேணுஜன்** (பிரான்ஸ்), **ஜிலக்ஷி** (பிரான்ஸ்), **சரண்** (பிரான்ஸ்), **சகீரன்** (பிரான்ஸ்),**சாரகி** (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாய் மாமனாரும், **தட்ஷா** (கனடா), **தக்ஷயா** (கனடா), ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பார்வைக்கு Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada வைக்கப்பட்டு பின்னர் (09.09.2020) புதன்கிழமை காலை 8.30 - முற்பகல் 11.30 மணியளவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**நல்லையா ஜெயவீரசிங்கம்**
**(தங்கன் - சித்தப்பா-சாவகச்சேரி)**
**077 693 3255**

தொடர்புகளுக்கு:
மாங்கை (கனடா - 0014 3777 79098)
தீபன் (கனடா - 0014 1690 36998)
விஜயன் (பிரான்ஸ் - 0033 6151 45567)
சிறி (பிரான்ஸ் - 0033 6518 22745)

## மரண அறிவித்தல்



### கிருஸ்ணகோபால் பாலச்சந்திரன்

**பிறப்பு:17.07.1962 இறப்பு:06.09.2020**

யாழ் எழுதுமட்டுவாள்' தெற்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணகோபால் பாலச்சந்திரன் நேற்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணகோபால்-செல்லம்மா தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை தவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், கிருபாதேவியின் பாசமிகு கணவரும், கோவரதன், கௌசிகன், தாட்சாயினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வமலர், கிருஸ்ணகரன், கிருஸ்ணவரன், செல்வறஞ்சினி, செல்வறாஜினி, காலஞ்சென்ற கிருஸ்ணகோபன், செல்வறஜனி, செல்வறாகினி, செல்வஅஜந்தா ஆகியோரின் பாசமிகு மூத்த சகோதரனும், தனுசா, சஞ்சிகா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், இராசதுரை, வசந்தரூபி, ஜெனிதா, ஆனந்தராசா, சசிகரன், சதீஸ், சேகர், கிருஸ்ணகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திருவேந்தன், டிஷாந், இனுசியா, கிருத்திகன், கிருஷாந், கிருசோன் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், பிரியங்கா, சாயிதா, டயானன், லக்சிகன், திசானி, சயானி, சகீரன், ஆரகி, சந்தோஸ், சாதுரி, சஜிதன் ஆகியோரின் பெரிய மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2020) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் எழுதுமட்டுவாழ் இராமியன் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

**0761786156, 0774937505, 004915215618975.**

**தகவல்.**
**குடும்பத்தினர்**

ES Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com 021 492 7471, 021 492 7472

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு இரண்டாம் ஆண்டு



**கதிரேசு சுந்தரமூர்த்தி**
பிறப்பு 26.10.1921
இறப்பு 20.08.2019

**சுந்தரமூர்த்தி தெய்வானைப்பிள்ளை**
பிறப்பு 05.12.1934
இறப்பு 10.09.2018

ஆண்டுகள் ஒன்றென்ன இரண்டென்ன நூறாயினும் ஆறாது
எம் நெஞ்சு இப்பூமியில் நாம் உள்ளவரை.
இறப்பு என்பது உடலுக்கு மட்டுமே!
உறவு முறைகள் மாறலாம்,சில உறவுகள் தொடர் கதை,
நீர் இருவீரும் அதற்கு விதிவிலக்கல்ல,வாழ்வீர் எம்க்குள் மீண்டும் பிறந்து.

பன்னாலை, தெல்லிப்பளை
0777034366

உங்கள் நினைவில் வாடும்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



### திருமதி வைத்திலிங்கம் பாலாமணி

காரைநகர் பெரியமணலைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் பாலாமணி நேற்று (06.09.2020) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-நல்லம்மா தம்பதியரின் அருமைப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி (விசுவப்பா) - சீதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் (கணக்காளர்-யாழ் மாநகரசபை, உதவி அரச அதிபர், மூதூர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற சந்திரகுமார் (திட்டமிடல் அதிகாரி வட-கிழக்கு மாகாண சபை), காலஞ்சென்ற வசந்தகுமாரி (மருத்துவர் - யாழ் போதனா வைத்தியசாலை), சாந்தகுமாரி (கனடா), சிவகுமார் (குமரன் பாம்), காலஞ்சென்ற மோகனகுமார் (மாணவன், யாழ் மத்திய கல்லூரி), ராஜ்குமார் (Share Marketing - Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற துரைசிங்கம், பாலசிங்கம் மற்றும் இரத்தினசிங்கம், சொர்ணாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், உமா (விவேகானந்தா கல்லூரி- கொழும்பு), கௌசலா (யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, சரஸ்வதி, நேசரத்தினம், தியாகராஜா, பூமணி, பாலாம்பிகை, சவுந்திராம்பிகை மற்றும் இராச ரத்தினம் ஆகியோரின் மைத்துனியும், பராசக்தி, நடராசா, இராசம்மா ஆகியோரின் சகலியும், சிவமைந்தன் (ஆஸ்திரேலியா), சிவமித்திரன் (லண்டன்), சிவஜனனி (கொழும்பு), லக்சன் (கனடா), சாலினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யவின் (UK) இன் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2020) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் "அன்னபதிவாசா", சிறுப்பிட்டி வடக்கில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக யாழ் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 618 0675 - சிவகுமார் (மகன்)
021 222 4634 - ராஜ்குமார் (மகன்)
076 246 5184

தகவல்:
பிள்ளைகள்.

## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 16.03.1942



விண்ணில் 30.08.2010

### அமரர் பொன்னையா செல்லையா

திதி: அபரபக்க பஞ்சமி

எம்மைப் பெற்று கதைகள் பல சொல்லி மார்பினில் எம்மை அரவணைத்து
நல்லாசானாய் நல்லறிவூட்டி பல சுமைகளுடன் எமைக் கற்பித்து
நல்வழி காட்டிய எம் அன்பு அப்பாவே!
ஆண்டுகள் பத்து என்ன ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
நீங்காது உம் நினைவு எம் இதயம் விட்டு.


ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

சிற்றம்பலம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### தம்பையா ஜீவரட்ணம்



வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்மையா ஜீவரட்ணம் நேற்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், குலசிங்கம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான தர்மபாலசிங்கம், கமலாதேவி மற்றும் விமலாதேவி, தேவராசா (கனடா), சந்திரதேவி, சர்வானந்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருமதி தம்பையா இரத்தினத்தின் பெறா மகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.09.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொத்தத்துறை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


ஞானசம்பந்தர்,
2 ஆம் ஒழுங்கை,
வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

தகவல்:
சகோதரன்
(சர்வானந்தன்)

தோற்றம் 25.05.1940
மறைவு 06.09.2020

## மரண அறிவித்தல்

அன்னை மடியில் 02 . 11 . 1947



ஆண்டவன் கரத்தில் 06 . 09 . 2020

### இரட்ணம் யேசுதாசன்

மருதடி லேன், யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரட்ணம் யேசுதாசன் நேற்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரட்ணம் ஞானம்மா தம்பதியரின் மகனும், வசந்தா தேவியின் (ஓய்வுபெற்ற கல்வித்திணைக்கள முகாமைத்துவ உதவியாளர்) அன்புக் கணவரும், இந்துஜாவின் பாசமிகு தந்தையாரும், காலஞ்சென்றவர்க ளான தமேந்திரா, குணநாயகம் (RG ஸ்ரோர்ஸ்) மற்றும் மின்னோ, வசந்தன், கிறிஸ்ரி, றொமாணி, இன்பநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், முரளீ தரனின் (கண்ணன்) பாசமிகு மாமனாரும், யதுசனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.09.2020) திங்கட்கிழமை மாலை 3.00 மணிக்கு றக்கா வீதி புனித திரேசம்மாள் ஆலயத்தில் நடை பெற்று, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/2, மருதடி லேன்,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தகவல்: மனைவி.
077 226 1232

## மசூதியில் எரிபொருள் குழாய் வெடித்து 24 பேர் சாவு

டாக்கா, செப்.7
பங்களாதேஷில் மசூதி ஒன்றில் எரிபொருள் குழாய் வெடித்ததில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 37 பேர் காயமடைந்துள்ளனர்.
பங்களாதேஷ் தலைநகர் டக்காவில் உள்ள மசூதியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற தொழுகையின் இறுதி நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என தெரியவருகின்றது.
குழாயில் ஏற்பட்ட கசிவின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தீயணைப்பு சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 7வயது சிறுவன் ஒருவனும் உள்ளடங்குவதுடன், உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (வ)



## மரண அறிவித்தல்



பிறப்பு
24
07
1977

இறப்பு
06
09
2020

### துஷ்யந்தி ஜெஸ்றீன்

சேமபுலம் வீதி, உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துஷ்யந்தி ஜெஸ்றீன் நேற்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற கருணராஜா விமலாவதி தம்பதியரின் அன்பு மகளும், ஜெஸ்றீனின் அன்பு மனைவியும், ஆஷா (பிரான்ஸ்), சியானு, மனுஷா, பூஜா, சந்தோஸ் ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரியதர்சன்-மதுவந்தியின் அன்புச் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (07.09.2020) திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கணவர்
(பழுக்கடை மொட்டபாஸ்)
077 386 2478

## மரண அறிவித்தல்



தோற்றம்
18
09
1957

மறைவு
06
09
2020

### மகாலிங்கம் வின்சன் கோமகன்

யாழ் அல்வாய் வடமேற்கு மாறாம்புலத்தை (நிலாவில்) பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் வின்சன் கோமகன் நேற்று (06.09.2020) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் இளைப்பாறிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி மகாலிங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி வேலுப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், மகேந்திராவதியின் அன்புக் கணவரும், ஜோய் ஞானவிழி (முகாமைத்துவ சேவை அலுவலகர்- வலிகாமம் வலயம்), ஞானசுதன் (Windforce உதவி பொறியியலாளர்- பளை/வவுனியா), ஞானப்பிரியா (விஞ்ஞான ஆசிரியை - கிளி/பளை மத்திய கல்லூரி), ஞானகீதா (விஞ்ஞான ஆசிரியர் - மு/வள்ளிபுரம் மகா வித்தியாலயம்), தேவசுதன் (மொரட்டுவ பல்கலைக்கழக கனிய அளவையியல் மாணவன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌசீகன் (புகையிரத நிலைய அதிபர்-சுன்னாகம்), Dr. பிரியந்தி (யாழ் போதனா வைத்தியசாலை), சங்கீத் (உத்தியோகத்தர்- இலங்கை வாங்கி நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வின்சன் குணாளன் (ஓய்வு பெற்ற நூலகர்), காலம் சென்ற வின்சன் குலமகன், கோமதி (ஐக்கிய இராச்சியம்), வின்சன் திருமகன் (ஐக்கிய இராச்சியம்), பாமதி (கனடா) மற்றும் குலமதி (ஐக்கிய இராச்சியம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அன்னமேரி நீடா, ஜெனிற்றா (ஜேர்மனி), ஷாமினி (ஐக்கிய இராச்சியம்), லிகோரி (ஐக்கிய இராச்சியம்), கருணைதாஸ் (கனடா), தயாபரன் ((ஐக்கிய இராச்சியம்), அமரர் தெய்வேந்திரராணி, சிவராஜலிங்கம் (ஓய்வு பெற்ற பிரதேச சபை செயலாளர்), சிவாநந்தலிங்கம் (கனடா) மற்றும் சிவச்செழியன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதி அஞ்சலி நாளை (08.09.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று இறுதி நல்லடக்க ஆராதனைக்காக நண்பகல் 12.00 மணியளவில் அல்வாய் மெதடிஸ்த தேவாலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு பங்கு வேம்படி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஞானசுதன் (மகன்
வின்சன் குணாளன் (சகோதரர்) 0094 77638 7179

### இந்தியாவில் கொரோனா தாண்டவம்

## ஒரே நாளில் 90,600 புதிய தொற்றாளர்கள்

புதுடில்லி, செப்.7
இந்தியாவில் ஒரே நாளில் 90,633 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது. 24 மணி நேர கொரோனா நிலவரம் தொடர்பில் மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட செய்தியில் இந்த விடயம் தெரி விக்கப்பட்டுள்ளது. உலகிலேயே முதன்முதலாக இந்தியாவில் தான் ஒரே நாளில் 90 ஆயிரம் பேருக்கு கொரோனாப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதேசமயம் குணமடைந்தவர்களின் எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது. நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 73 ஆயிரத்து 642 பேர் கொரோனாவில் இருந்து மீண்டுள்ளனர். நேற்று முன்தின நிலவரப்படி இந்தியாவில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 41 இலட்சத்து 13ஆயிரத்து 812ஆக அதிகரித்துள்ள நிலையில், குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 31 இலட்சத்து 80 ஆயிரத்து 865ஆக உயர்ந்துள்ளது. (வ-இ)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
11
03
1942

இறப்பு
08
08
2020

அமரர்
### கதிர்காமு சபாரத்தினநாயகி

காவல் தெய்வமது சிவன் கழலடியை அடைந்து
இன்று மாதம் ஒன்று ஆனதுவே
மாண்டார் மீள்வதில்லை இது மானிட நியதி எனில்
ஆண்டவனடியினின் கீழ் அடைக உம் ஆன்மா சாந்தி
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சிவதர்ஷணம்
கே.கே. எஸ் வீதி,
இணுவில் மேற்கு.

உங்கள் நினைவுகளோடு
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை இராஜகுலேந்திரன்



யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு அரசடிப் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், இங்கிலாந்து Leighton Buzzardஐ வசிப்பிடமாக கொண்ட பொன்னுத்துரை இராஜகுலேந்திரன் 29.08.2020 இறைபதம் எய்தினார்.
அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி பொன்னுத்துரை - மகேஸ்வரி தம்பதியரின் ஏக புதல்வனும், சுருவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற பண்டிதர் சிவசம்பு - மங்கையர்கரசி தம்பதியரின் அன்பு மருமகனும், இசைஞானியின் அன்புக் கணவரும், ஷைரா, நிரூபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வர்ஷினி பிரியகரி அவர்களின் அன்பு மாமனும், இளம்பூர்ணன், பரிமேல் அழகன், காலஞ்சென்ற இராஜராஜன் மற்றும் திருவரங்கன் ஆகியோரின் மைத்துனரும், ஹிமானி, ஈஷன், சொறயா, கீயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.09.2020 மாலை 3.00 மணியளவில் (UK. Time) நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தமிழ்த் தேசிய...

யாழ்ப்பாணம், செப். 7
இளைஞர்களுடைய செயற்பாடுகளை பார்த்து தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும் தங்களுக்குள் ஒன்றுபட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கட்சிகளின் இளைஞர் அணியினர், தமது கட்சிகளின் மூத்த வயதான தலைவர்களிடம் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட வாலிபர் முன்னணி தலைவர் க.பிருந்தாபன், செயலர் சேனாதிராசா கலையமுதன், தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞர் அணி தலைவர் கி.கிருஸ்னமேனன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் மணிவண்ணன் அணியைச் சேர்ந்தவர்கள் கூட்டாக யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளனர்.

தியாக தீபம் திலீபனின் நினைவு நாளை முன்னிட்டு இடம்பெறப்போகும் நடைபவனி குறித்து அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று இடம்பெற்றது. ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட கிருஸ்னமேனன் தெரிவிக்கையில், இளைஞர்களான எங்களுக்குள் எந்தவிதமான பிரிவினைகளும் முரண்பாடுகளும் இல்லை. அவ்வாறு இருந்தாலும் தாங்கள் தேசியத்துக்கான ஒரு விடயம் வரும்போது ஒற்றுமையான செயல்பாடுகளையே மேற்கொண்டு வந்துள்ளோம். இளைஞர்களாகிய எங்களுடைய செயற்பாடுகளைப் பார்த்து தலைவர்கள் தாங்களும் ஒன்றிணைய வேண்டும். அவ்வாறு ஒன்றிணைந்தால்தான் இனப்பிரச்சினைக்கான தீர்வையோ அல்லது ஏனைய விடயங்களையோ பேசமுடியும் என்ற ரீதியில் உணர்வார்களாக இருந்தால் நிச்சயமாக அது சாத்தியமாகும். எதிர்காலத்தில் ஒரு ஒற்றுமையான பயணத்தை மேற்கொள்ளுவதற்கு இது ஒரு ஆரம்ப புள்ளியாக இருக்கும் என்று தெரிவித்துள்ளார்.

தியாக திபம் திலீபனின் 33 ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு முள்ளிவாய்க்காலில் இருந்து நல்லூரில் அமைந்துள்ள திலீபனின் நினைவுத் தூபி வரை நடைபயணம் ஒன்று இடம்பெற இருக்கின்றது. நடைபயணம் தமிழர் தாயக பொது அமைப்புகள், மற்றும் தமிழ் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெற இருக்கின்றது.

எதிர்வரும் 21 ஆம் திகதி முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் இருந்து ஆரம்பமாகும் நடைபவனி 26 ஆம் திகதி யாழ்ப்பாணம், நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தை சென்றடைய இருக்கின்றது.

இடம்பெற இருக்கின்ற நடைபவனியில் தாங்களும் கலந்துகொள்ள போவதாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ் மாவட்ட வாலிபர் முன்னணி, தமிழ் மக்கள் கூட்டணியின் இளைஞர் அணி தலைவர் கி.கிருஸ்னமேனன் மற்றும் மணிவண்ணன் அணியினர் தெரிவித்துள்ளனர். (ஒ,5,20)

## எங்களுக்கு...

13ஆவது திருத்தத்தை முழுமையாக நீக்குவதே நாட்டின் பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுத்தரும் என்று அரசிலுள்ள கடும்போக்குவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இந்த நிலையிலேயே, 13ஆவது திருத்தம் தொடர்பில் இந்திய தூதுவரின் நிலைப்பாட்டில் மாற்றமில்லைஎன்று இந்தியத்தூதரகபேச்சாளர் தெரிவித்துள்ளார். நல்லிணக்கம் மற்றும் சமாதானம் தொடர்பாக இந்தியா கொண்டுள்ள நீண்டகால நிலைப்பாட்டையும் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்தவேண்டும் என்பதையும் இந்தியத் தூதுவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார் எனவும் ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

இது தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம், சர்வதேச ஊடகம் ஒன்றின் கொழும்புச் செய்தியாளர் நேற்று இரவு கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
புதிய அரசமைப்புத் தொடர்பில் எமக்கு எந்த நாடும் பாடம் எடுக்க முடியாது. அழுத்தம் கொடுக்கவும் முடியாது. அரசமைப்பு வரைவு தயாரிப்பதற்கு 9 பேர் கொண்ட நிபுணர் குழுவை ஜனாதிபதி கோத்தாபய நியமித்துள்ளார். அவர்கள்தான் புதிய அரசமைப்பு வரைவை தயாரிப்பார்கள். தயாரிக்கப்பட்ட வரைவு தொடர்பில் அமைச்சரவையும் நாடாளுமன்றமும் முடிவு எடுக்கும். அது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையும் பெறப்படும்.

இலங்கையின் அரசமைப்பு 20 தடவைகள் திருத்தப்படுகின்றன. மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகளினால் இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. புதிய அரசமைப்பில் இன, மத, மொழி ரீதியில் யாரும் பாதிக்காத வகையில் தயாரிக்கப்படும். நாட்டுக்குப் பாதகமான சரத்துக்கள் நீக்கப்படும்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்கத்தின் பிரகாரம் 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற அடிப்படையில் அரசமைப்பு உருவாக்கப்படும், என்றார். (ஒ,5,22)

## பாடசாலை...

கடந்த 2ஆம் திகதி தொடக்கம், தரம் 6 முதல் 13 ஆம் வகுப்பு வரையிலான கல்வி நடவடிக்கைகள் வழக்கம் போல் ஆரம்பமாகியன.

ஆரம்ப வகுப்புகளின் ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்கள் பாடசாலைக்கு இன்று வருவார்கள். கல்வி நடவடிக்கைகள் வழக்கம்போல நாளை முதல் தொடங்கும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பாடசாலை மாணவர்கள் சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுவதை தவிர்க்கின்றனர் என்று சுகாதார அதிகாரிகள் கூறுகின்றனர். சரியான சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றா விட்டால் நாட்டில் கொரோனாத் தொற்று மீண்டும்ஏற்படும் அபாயம் இருப்பதாக தொற்றுநோயியல் பிரிவின் தலைமை தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார். (ஒ,5)

## ரெலோ...

கத்தின் யாழ். மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

கட்சியின் நிறுவுனத் தலைவர் குட்டிமணியின் மனைவி உயிரிழந்துள்ளமையால், பத்திரிகையாளர் சந்திப்பை இரத்து செய்தது வரவேற்பு நிகழ்வை மாத்திரம் அந்தக் கட்சி நடத்தியது.

வரவேற்பு நிகழ்வில் ரெலோ கட்சியின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வுக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,இ)

## சங்கிலி...

காமம் இராமாவில் தேங்காய் எண்ணெய் ஆலைக்கு அருகில் இடம் பெற்றுள்ளது.

55 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் கொடிகாமம் இராமாவில் முருகன் ஆலயத்தை தரிசித்து விட்டு சைக்கிளில் வீடு சென்றுள்ளார். பின் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் அந்த பெண்ணை தள்ளி விழுத்தி விட்டு இரண்டு பவுண் சங்கிலியை அறுத்துச் சென்றுள்ளார். (ஒ,5,159)

## மணி அணி...

உருவாக்கப்பட்டுள்ளது என்றுதகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்புரிமையில் இருந்து சட்டத்தரணி வி.மணிவண்ணன் இடைநிறுத்தப்பட்டுள்ளார் என கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தார். இந்த நிலையிலேயே மணிவண்ணனைத் தலைமை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ஒ,ம,இ)

## மத்திய...

வருகின்றது.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் நுண்நிதிக் கடனால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக ஆராயப்பட்டு வருகின்றபோதும் எந்தத் தீர்வுகளும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## சடலமாக...

முருகதாஸ் (வயது 32) என்ற இளைஞரே தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். காதல் விவகாரமே இவரது உயிரிழப்புக்குக் காரணம் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஒ,5,26)

## வாள்கள்...

சிறப்பு அதிரடிப்படையினர் அங்கிருந்து 3 வாள்களையும், ஒரு இரும்புப் பொல்லையும் மீட்டுள்ளனர். சந்தேகத்தில் 32 வயதுடைய இளைஞரைக் கைது செய்ததுடன், அவரை இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். (ஒ,5,26)

## ஆசிரிய...

முன்னாள் ஆசிரிய ஆலோசகர் மகாலிங்கம் வின்சன் கோமகன் (வயது 63) சம்பவ இடத்தில் உயிரிழந்தார். வடமராட்சியிலிருந்து மானிப்பாய் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்துள்ளார். கோப்பாய் பூதர்மடத்துக்கு அருகில், யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் இவர் உயிரிழந்துள்ளார். சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டது. இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (ஒ,5,26)

## 815 கிலோ...

தெரிவித்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக இவை இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

கற்பிட்டி கடற்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் கடற்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போதே உரைப் பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் மஞ்சள் மீட்கப்பட்டுள்ளதுடன், சந்தேகத்தில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 24 இற்கும் 31 இற்கும் இடைப்பட்ட வயதுடையவர்கள் எனவும், அவர்கள் பயணித்ததாகக் கூறப்படும் சிறிய ரக லொறியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

கற்பிட்டி பிரதேசத்தில் கடந்த சில வாரங்களாக இவ்வாறு சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக கூறப்படும் பல இலட்சம் ரூபா பெறுமதியுடைய மஞ்சள் கடற்படையினரின் விசேட தேடுதல் நடவடிக்கையால் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

## பெண்ணை...

ழந்துள்ளார்.

உரும்பிராயைச் சேர்ந்த துசாந்தி (வயது 47) என்பவரே உயிரிழந்துள்ளார்.


இந்தச் சம்பவம் ஏ 32 பிரதான வீதியில் நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் போரில் தனது ஒரு காலை இழந்த நிலையில் செயற்கைக் கால் பொருத்தியுள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ,5,159)

## மரம்...

பகுதியில் மரம் முறிந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். 60 வயதுடைய பெண்ணொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொழும்பு டுப்ளிகேசன் வீதியில் மரம் முறிந்து பஸ் மீது வீழ்ந்ததில் போக்குவரத்து நீண்ட நேரம் நேற்றிரவு பாதிக்கப்பட்டது. (ஒ,இ)







வவுனியா மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி வவுனியா நகரசபை உள்ளக அரங்கில் நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தப் போட்டி மாவட்ட விளையாட்டு அதிகாரி பர்சூர் தலைமையில் இடம்பெற்றது. போட்டியில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சமன் பந்துலசேன, உதவி மாவட்ட செயலாளர் சபர்ஜா, விளையாட்டுத்துறை அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இந்தச் சுற்றுப் போட்டிகளில் பூப்பந்தாட்டம், மேசைப்பந்தாட்டம், கடற்கரைக் கரப்பந்தாட்டம் ஆகிய விளை யாட்டுக்கள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-110)

# முதலாவது ரி-20 தொடரில் இங்கிலாந்து வெற்றி

**லண்டன், செப்.7**
**இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான முதலாவது ரி20 போட்டியில் இங்கிலாந்து அணி 2 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.**



இந்த இரு அணிகளுக்கிடையிலான முதலாவது ரி20 போட்டி, சவுதாம்ப்டனில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட20 ஓவர்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில், இங்கிலாந்து அணிசார்பாக டேவிட் மலன் 66 ஓட்டங்களையும், ஜோஸ் பட்லர் 44 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் அகர், ரிச்சர்ட்சன், மைக்ஸ்வெல் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினர். 163 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலியா அணி, 20 ஓவர்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. ஆஸ்திரேலியா அணி சார்பாக துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக டேவிட் வோர்னர் 58 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பரபரப்பாக நடந்த போட்டியில் 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இதன்மூலம் அந்த அணி 1-0 என்ற கணக்கில் தொடரில் முன்னிலை வகிக்கிறது. (ற)

## ஐ.பி.எல்லில் 3 ஆவது வீரராக டோனி விளையாட வேண்டும்

### சுரேஷ் ரெய்னா விருப்பம்

புதுடில்லி, செப்.7
ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் 3 ஆவது வீரராக டோனி விளையாட வேண்டும் என்று சுரேஷ் ரெய்னா விருப்பம் தெரிவித்துள்ளார்.

13 ஆவது ஐ.பி.எல். ரி20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நவம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில் ரெய்னாவுக்கும் கப்டன் டோனிக்கும் மோதல் இருந்ததாகவும், மேலும் சி.எஸ்.கே. நிர்வாகத்துடன் கருத்து மோதல் ஏற்பட்டதாகவும், இதன் காரணமாகவே ரெய்னா விலகியதாக தகவல் வெளியானது. இதை ரெய்னா மறுத்திருந்தார். தனது சொந்த காரணத்துக்காகவே போட்டியில் இருந்து விலகினார் தெரிவித்தார். ரெய்னா ஆடாததால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் அவரது இடமான 3 ஆவது வரிசையில் யார் களம் இறங்க போகிறார் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. இந்த நிலை யில் ஐ.பி.எல். போட்டியில் டோனி 3 ஆவது வீரராக களம் இறங்க வேண்டும்என்றுரெய்னா விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
அந்த வரிசை அணிக்கு அத்திபாரம் போன்றது. இதனால் டோனி 3 ஆவது துடுப்பாட்ட வீரராக ஆடவேண்டும். சர்வதேச போட்டிகளில் 3 ஆவது வீரராக ஆடிய அனுபவம் டோனிக்கு இருக்கிறது- என்றார். (ற)

## நான்காவது சுற்றுக்கு ஜோகோவிச் முன்னேற்றம்



நியூயோர்க், செப்.7
அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் ஜோகோவிச் 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென் னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது. இதில் 5 ஆவது நாளில் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3 ஆவது சுற்று ஆட்டத்தில் முதன்மை வீரரும், 17 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான நோவக் ஜோகோவிச் (சேர்பியா), தரவரிசையில் 29 ஆவது இடத்திலுள்ள ஜேர்மனியின் ஜோன் லினர்ட் ஸ்ரப்பை எதிர்கொண்டார். இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6:3, 6:3, 6:1 என்ற நேர்செட் கணக்கில் ஜோன் லினர்ட் ஸ்ரப்பை தோற்கடித்து 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ற)





## வடக்கு பிரீமியர் லீக் சனியன்று ஆரம்பம்

வவுனியா, செப்.7
வடக்கு மாகாணத் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரீமியர் லீக் சுற்றுப்போட்டிகள் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. வடக்கு மாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் யோ.ரதீபன் தலைமையில் இந்தச் சுற்றுப்போட்டி இடம்பெற்றது. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் அணிகள் இதில் பங்குபற்றின.

மட்டுப்படுத்திய இருபது பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டியில், நேற்றுக் காலை வவுனியா மற்றும் முல்லைத்தீவு அணிகள் மோதிய நிலையில் வவுனியா அணி வெற்றி பெற்றது. நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் அணிகளுக்கான போட்டிகள் இடம்பெற்றன.

சுழற்சிமுறையில் இடம்பெறும் இந்தப் போட்டி ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இறுதிப்போட்டியும் அன்றையதினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-110)



யாழ்ப்பாண மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான பெண்களுக்கான ஹொக்கித் தொடரில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி சம்பியனானது. இந்தப் போட்டியின் இறுதியாட்டம் அண்மையில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. இதில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானைப் பிரதேச செயலக அணி மோதியது. இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும், சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி ஆட்டநேர முடிவில் ஒரு கோலை அடித்து 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது. (ற-422)